# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, மாசி 12 உ (24-2-71) புதன் துல்ஹஜ் பிறை 27 புத்தகம் 25 இதழ் 15



**சிவபுராணம்**

23—2—71 சிவராத்திரியை முன்னிட்டு சிவபுராணம் உரையுடன் அச்சிட்டுள்ளோம். வாங்கி பாராயணம் செய்து பயன் அடையுங்கள். 10 மேலுறைகள் அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.


# தி. மு. க. வெற்றி உறுதி!

## தமிழகமெங்கும் தனிப்பெரும எழுச்சி!

## சுதந்திரன் ஆசிரியர் தமிழ் நாட்டிலிருந்து தரும் சூடான செய்தி!

"தமிழகத்தில் பார்த்த திசையெல்லாம் கறுப்புசிவப்பு கொடிகள் காற்றில் பட்டொளி வீசிப் பறந்திடக் காண்கிறேன்!



எந்தத் தெருவால் போனாலும் "அண்ணா வாழ்க!" என்ற குரல்களே என் காதில் விழுந்துகொண்டிருக்கின்றன! சுவரெல்லாம் அண்ணாவின் படங்களும் கலைஞர் கருணாநிதியின் படங்களும் சுவரொட்டிகளாக நின்று என கண்களுக்கு விருந்தளிக்கின்றன! ஒவ்வொரு தி.மு.க. கூட்டத்திலும் நான் உணர்ச்சி வெள்ளத்தில் ஒருவனாக மிதக்கிறேன்! காங்கிரஸ்காரருக்கு— சுடச்சுட கலைஞர் கொடுக்கும் சாட்டைகளில் மெய் மறந்து நிற்கிறேன்...' தி. மு. க. வாழ்க!' என்று முழக்கமிடும் இளைஞர் கூட்டத்தையும் மாணவர் படையினையும் காணும் போது தி. மு. க. வெற்றி இம்முறை உறுதி உறுதி என்று புளகாங்கிதத்தால் துள்ளிக் குதிக்கிறேன்!"

தமிழகத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்கள் தமிழ் நாட்டின் தேர்தல் நிலை குறித்து ஈழத் தமிழ் பேசும் மக்களுக்கு இனிப்பான செய்தி ஒன்றினை அனுப்பியுள்ளார். அச் செய்தியில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



மேலும் திரு. கோவை மகேசன் அவர்கள் தமது செய்தியில் கூறியிருப்பதாவது:—

இம்முறை தி. மு. க. 140 க்கும் 150க்கும் இடையி

(2-ம் பக்கம் பார்க்க)

## மிதி பலகையிலும் தமிழ் மிதிபடுகிறதா?

இ. போ. ச. பஸ்களில் 'மிதிபலகையில் பயணம் செய்யாதீர்' என்று ஒரு விளம்பரம் ஒட்டப்பட்டிருக்கிறது. இவ் விளம்பரம் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே ஒட்டப்பட்டிருக்கிறது. தமிழைக் காணவில்லை. சிங்களம் ஆங்கிலம் தெரியாத தமிழர் வாசிக்கத் தெரியாத காரணத்தால் மிதி பலகையில் பயணம் செய்து போலீசாரிடம் அடிவாங்கி மிதிபடவேண்டியது தானா? ஏனையா மிதிபலகை விஷயத்தில் கூட தமிழை ஒதுக்கி மிதித்து தள்ளிவிட்டிருக்கிறீர்கள்—?

தமிழ் சங்கப் பலகையில் இருந்ததாக நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம்; இப்போது மிதிபலகையில் கூட தமிழுக்கு இடமில்லையா?

சுனில் முனசிங்கா இலங்கை வானொலியில் பாரதியின் தமிழுக்கு அள்ளிவைக்கிறார். அனில் முனசிங்கா இலங்கை போக்குவரத்து வாகனங்களில் தமிழுக்கு கொள்ளி வைக்கிறார்.

வெறிபிடித்த இந்த சமசமாஜிகளுக்கு தமிழ்ப்பகுதிகளில் வக்காலத்து வாங்கும் விஸ்வநாதன்களே! உங்கள் விழிகள் திறக்காதா?

## அரசாங்க எழுதுவினைஞர் பதவி உயர்வில் மோசடி!

### தந்தை செல்வா கண்டனம்

அரசாங்க எழுது வினைஞர் தரம் II இல் இருந்து தரம் I க்கு ஆன பதவி உயர்வுகள் சமீபத்தில் வழங்கப்பட்டுள்ளன அல்லவா? இதில் பெரும்பாலான தமிழர்கள் (பழைய ஊழியர்) சிங்களத் தேர்ச்சி இல்லை என்ற ஒரே காரணத்தால் பதவி உயர்வை இழந்துள்ளனராம். பழைய ஊழியருக்கு சிங்கள நிபந்தனை இல்லையென்ற போதும் சிங்களத் தேர்ச்சியை அளவுகோலாக வைத்து இப்பதவி உயர்வு



வழங்கப்பட்டிருப்பதை அரசாங்க தமிழ் எழுது வினைஞர் சங்கம் வன்மையாக ஆட்சேபித்து பொது நிருவாக அமைச்சருக்கு தந்தி ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

தமிழரசுத் தலைவர் தந்தை செல்வா அவர்களும் அரசாங்கத்தின் மொழி வெறி பிடித்த இந்நடவடிக்கையைக் கண்டித்து அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்

(2-ம் பக்கம் பார்க்க)

## தினபதியார் தட்டிவிட்டார் ஏலேலோ! தியாகராசா பட்டுவிட்டார் ஏலேலோ!

தமிழ் புறக்கணிப்பு கண்காட்சி பற்றி வட்டுக்கோட்டை பா. உ. திரு. தியாகராசாவின் பெயரில் தினபதியில் வெளிவந்த 'புரட்டு அறிக்கையை' தான் அப்படி வெளியிடவில்லையென தம்முடைய அந்தரங்க நண்பரிடம் கூறியுள்ளாராம் அவர்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினராகி நீங்கள் இவ்வளவு கீழ்த்தரமான செய்தியை வெளியிட்டீர்களே என்று அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு திரு. தியாகராசா 'நான் என்ன செய்யலாம் தினபதி ஆசிரியர் என்னை மாட்டி விட்டார்' என்று கூறினாராம்.

ஊர்காவற்றுறைப் பா.உ. திரு. க. பொ. இரத்தினம்

2-ம் பக்கம் பார்க்க)

## தமிழரா? உடனே பரீட்சையை தடை செய்!

### துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனத்தில் சதி

துறைமுகச் சரக்கு கூட்டுத்தானத்தில் காலியாக இருந்த இழுவைக் கப்பல் இயந்திரப்படகுப் பகுதியில் உள்ள சுக்கானி பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு இம்மாதம் 12ம் 13ம் திகதிகளில் நடைபெற விருந்தநேர்முகப்பரீட்சை பரீட்சைச்சபையில் தமிழர்கள் இடம்பெற்ற காரணத்தினாலும், குறிப்பிட்ட அவ்வெற்றிடங்களுக்குரிய மனுதாரில் கூடுதலாகத் தமிழர் இருப்பதனாலும் இறுதி நேரத்தில் பரீட்சை இரத்தாக்கப்பட்ட தாக அறியப்படுகிறது.

**சோசலிசமாம் சோசலிசம்...!**

மோட்டார் வாகனங்களிற்கான வருடாந்த வரிச்சிட்டைப் பெறுவதற்கான படிவத்தைத் தமிழில் பூர்த்தியாக்கிக் கொடுக்கும் மோட்டார் வாகன உரிமையாளர்கட்கு யாழ்ப்பாணம் கச்சேரியில் வழங்கப்படும் வரிச்சிட்டு சிங்கள மொழியில் எழுதப்பட்டு வழங்கப்படுகிறது. 'என்னையா' இது? தமிழ்ப் பகுதியில் தமிழனுக்கு வழங்கப்படும் வரிச்சிட்டு சிங்களத்திலா?' என்று கேட்காதீர்கள் — அதுதான் சோசலிசம்!

## ஒற்றுமைக் குழு செயலாளரின் வாழ்த்து!

7.2.71ல் வல்வையில் நடந்த ஒற்றுமை மாநாட்டில் உருவாக்கப்பட்ட ஏகோபித்த ஒற்றுமையைப் பாராட்டி, விசேட குறிப்புகளும், கட்டுரைகளும் சுதந்திரன் வாரப் பதிப்பில் பிரசுரித்து, மேலும் ஒற்றுமை திடப்படவித்திட்டமை மறக்கமுடியாத பெரும் பணியாகும்.

இது சம்பந்தமாய், பொதுவாக தமிழினத்தின் சார்பிலும், விசேடமாய் வல்வை வாலிபர்கள் சார்பிலும் தாழ்மையான நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்பணியில் தொடர்ந்து உதவிபுரிவீர்களென்பதற்கையமில்லை.

—ச. ஞானமூர்த்தி
செயலாளர் ஒற்றுமைக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# எங்கும் நிறைந்தவரே! எல்லாம் வல்லவரே!

## எண்ணம்

## மனச்சாட்சி பேசாதா?

சிங்கள இனவெறிச் சிறீலங்கா கட்சியின் அம்பாறை மாநாடு பற்றி ஒருவார்த்தை எழுதவேண்டியிருக்கிறது:

பறிபோன தமிழனின் பழைய நிலமான பட்டிப்பளை ஆற்றங்கரையிலே—அம்பாறையிலே— நின்று அம்மையார் "இந்த நிலமும் ஒருகாலத்தில் தமிழனின் நிலமாய் இருந்து நாம் பறித்தெடுத்த நிலந்தானே— இதுபோல ஈழத்தின் ஏனைய தமிழ்ப் பகுதிகளையும் பறித்தெடுப்பது எம்மவர்க்கு இயலாத காரியமா? என்ன?' என்று நினைத்தாரோ என்னவோ கொஞ்சம் துணிச்சலாகவே பேசியிருக்கிறார்.

அவர் பேசிய பேச்சின் ஒரு சிறு பகுதியை கீழே அப்படியே தருகிறோம்:—

"வடக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள இனவெறியர்கள் நாட்டைக் கூறுபோட முனைந்தபோதிலும், அப்பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் சோசலிசப் பாதையிலேயே தேசிய ஐக்கியத்தை நோக்கி வீறுநடை போட முடிவுசெய்துவிட்டார்கள்.''

ஈழத்தின் பிரதமர் வாயிலிருந்து சிந்திய பொன் வாசகங்களையே நீங்கள் மேலே காண்கிறீர்கள். ஆமாம்— அம்மையார் இப்படி அம்பாறை மாநாட்டில் திருவாய் மலர்ந்தருளிய நேரத்தில் அவர் கூற்றைப் பொன் வாசகமாகத் தான் அங்கிருந்த அமைச்சர் குமாரசூரியர் மட்டக்களப்பு இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் பி. ஆர். செல்வநாயகம் முதலானோர் ஏற்று மயங்கிப்போய் இருந்தார்களாம்.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலான 'சுதந்திரன்' சார்பாக நாங்கள் அம்மையாருக்கு ஒன்று சொல்லி வைக்க விரும்புகிறோம்: அம்மையாரே! அமைச்சர் குமாரசூரியரும் அல்பிரட் துரையப்பாவும் காவலூர் கதிரவேலுவும் பி. ஆர். செல்வநாயகமும் 'இலங்கைத் தமிழினம்' அல்ல என்ற உண்மையை நீங்கள் அறியும் நாள் விரைவில் வரும்...மிக விரைவில் வரும்......உங்கள் இராணுவத்தையும் போலீசையும் சரி செய்து வைத்துக் கொண்டு பழைய காலங்களைப் போல கைவரிசை காட்டத் தயாராக இருங்கள்!

வடக்கும் கிழக்கும் எப்படி இருக்கிறது என்பதை இதுவரை துப்பறியும் போலீசார் உங்களுக்குத் தெளிவாக விளக்கிக் கூறியிருப்பார்கள் என்றே நம்புகிறோம்.

முன்னும் பின்னும் போலீஸ் 'ஜீப்' வண்டிகள் பவனி வர அமைச்சர் குமாரசூரியர் யாழ்ப்பாணத்துக்கு பயந்து பயந்து விஜயம் செய்து திரும்புவதை நாங்கள் அறிகின்ற அளவு நீங்கள் அறியமாட்டீர்களா? பொய் சொல்லாதீர்கள்?

இந்த ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள போலீசார் எத்தனை கறுப்புக் கொடிகளை மரங்களில் ஏறி அவிழ்த்தெடுத்தார்கள் என்ற செய்தி உங்களுக்குக் கிடைக்காமலா போய் இருக்கும்? நடிக்காதீர்கள்.

உங்கள் நிதியமைச்சர் எம். எம். பெரேரா யாழ்ப்பாணம் சென்றபோது வழிகளெல்லாம் 'திரும்பிப்போ' என்று எழுதி ஒட்டிவைத்திருந்தார்களாமே—வேறு என்னென்ன வெல்லாமோ செய்து வரவேற்றார்களாமே—அவரே வந்து 'மூக்கைப் பொத்திப் பிடித்தபடி' அந்தச் செய்திகளை உங்களுக்குக் கூறியிருப்பார்... இல்லை என்கிறீர்களா?

திருகோணமலை கோட்டையை 'ராஜசிங்காகோட்டை' என்று பெயர்மாற்ற நீங்கள் முடிவெடுத்ததையும் அங்கிருந்து உங்களுக்குப் பறந்து வந்த தந்திகளையும் அங்கு உருவான சூடான நிலை பற்றி ஒற்றுப் பகுதியினர் உங்களுக்கு அனுப்பிய பயங்கரச் செய்திகளையும் உங்கள் நினைவுக்கு ஒருமுறை கொண்டு வாருங்கள் — மறைக்காதீர்கள்.

மட்டக்களப்புக்கு உங்கள் கூட்டணிச் சக தோழர் வ. பொன்னம்பலம் போன நேரத்தில் 'பொன்னம்பலத்துக்கு இங்கு என்ன வேலை?' என்று மாணவர்கள் மதிற் சுவரில் எழுதி மாஸ்கோ வீரரை விரட்டி அடித்தார்களே—தோழர் வந்து முறையிட்டிருப்பாரே—மறந்து போனீர்களா?

அம்மையாரே! அம்மையாரே! வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள்—குறிப்பாக இளைஞர்கள்— அதிலும் சிறப்பாக மாணவர்கள் பொறுமையின் எல்லை கடந்து சூடேறிப்போய் இருக்கும் வேளையில் 'தட்டிக் கழிக்கும்' மனோநிலையை விட்டு கொஞ்சம், பண்போடு நாட்டுப் பிரதமர் என்ற பொறுப்புணர்வோடு பேசப் பழகிக் கொள்ளுங்கள் என்று உங்களை ஈழத் தமிழினத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழன் தனது உரிமைகளை இழந்து—தனது தனித்துவத்தை இழந்து— சோசலிசம் வாங்க ஒருபோதும் தயாராக இல்லை.

இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழரும் சிங்களவரும் ஈழத்தில் உறுதியான ஒற்றுமையோடு சோசலிசத்தை அமுல் நடத்தவுள்ள ஒரே வழியான 'சோசலிச சமஷ்டி' பற்றி நீண்ட காலமாக வாதாடிவருகிறது.

சமஷ்டிக் கோரிக்கையை 'பிரிவினை' என்று பொய்யாகவும் பிழையாகவும் திட்டமிட்டும் வியாக்கியானம் செய்து விளையாடும் 'சிறுபிள்ளை அரசியலை' இனியேனும் கைவிட்டு ஈழத்தமிழினத்தின் உணர்ச்சியை ஒரு சிறுபான்மை இனத்தின் புனிதமான நீதியான உணர்ச்சியாக மதிக்க முன்வாருங்கள்.

## இதைச் செய்வீரா?

"தோழர் வி. பொன்னம்பலம் இலங்கையில் நீண்டகாலமாக ஒரு கருத்தைச் சொல்லி வருகிறார். அந்தக் கருத்து இதுதான்:-

"தமிழரசுக்காரர்கள் வட கிழக்கு மாகாணங்களில் சொல்லும் கருத்தை தெற்குப்பகுதிகளில் எடுத்துச் சொல்ல அவர்களுக்குத் துணிச்சல் இல்லை; தமிழ்ப் பகுதிகளில் வீரம் பேசுவார்கள்— சிங்களப் பகுதிகளில் வாலாட்டமாட்டார்கள்: வடக்கிலும் கிழக்கிலும்செய்வதைத் தெற்கிலே செய்ய அவர்களுக்குப் பயம். ஆனால் கம்யூனிஸ்டுகளான நாங்களோ ஈழத்தின் எந்த மூலையிலும் ஒரே கருத்தைத் துணிந்து சொல்லுவோம். ஒரே காரியத்தை ஈழத்தின் எந்த மூலையிலும் துணிந்து செயல்படுத்துவோம்.''

இப்படிக் கூறிவரும் தோழர் வி. பொன்னம்பலம் அவர்களுக்கு நான் ஒன்று சொல்வேன்... தோழரே! தமிழரசுக் கட்சிக்காரர் வடக்கிலும் கிழக்கிலும் அல்ல சிங்களவர் மத்தியில் கொழும்பிலேதான் முதன் முதல் சத்தியாக்கிரகம் செய்தார்கள். சிங்களவர் மத்தியில் கொழும்பில் தமிழரசுத் தலைவர் பலரின் வீடுகள் இருக்கின்றன. அவர்கள் ஒன்றும் பயந்து வாழ்வதாக எனக்குத் தெரியவில்லை.

தோழரே! இலங்கையில் எந்தப் பாகத்திலும் கம்யூனிஸ்ட் கட்சிக்காரன் எதுவும் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறான் — தெற்கிலும் வடக்கிலும் அவன் ஒன்றையே பேசுவான் ஒன்றையே செய்வான் என்று நீங்கள் கூறுகின்றீர்கள் அல்லவா? நான் உங்களிடம் பணிவோடு கேட்கும் ஒரு காரியத்தை நீங்கள் செய்வீர்களா? தெற்கில் நீங்கள் புரிந்திருக்கும் அதே காரியத்தை வடக்கில் செய்ய உங்களுக்குத் துணிச்சலுண்டா?

கொழும்பிலே தமிழை எதிர்த்து சூடு வாங்கி மாண்ட பிக்குவான இரத்தினசாரதேரோவுக்கு சிலை எழுப்பி வைத்திருக்கிறீர்களே—அதே சிலையை யாழ்ப்பாணத்திலும் எழுப்ப உங்களுக்குத் தைரியமுண்டா?

யாழ்ப்பாண முற்றவெளியில் அதே புத்தபிக்குவின் சிலையை நிறுவி—கொழும்பில் அச்சிலை திறப்பில் கலந்து கொண்டு உரையாற்றியது போல் உங்கள் தலைவர் பீட்டர் கெனமன் யாழ்ப்பாணத்திலும் சிலை திறந்துவைத்து உரை நிகழ்த்துவாரா?

முடியுமா உங்களால்? முதுகெலும்புண்டா? செய்வீர்களா?

—காசி ஆனந்தன்

(இணுவில் கூட்டத்தில் பேசியது)

### அரசாங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயக்கா அவர்களுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார். 'இது அநீதியான காரியம்' என்று அவர் அவ்வஞ்சலில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க தமிழ்எழுதுவினைஞர் சங்கத்தின் செயலாளரான திரு. கந்தசாமி அவர்கள் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், மிகவிரைவில் தாங்கள் பொது நிருவாகஇணைக்களத்தின் அதிபர் அவர்களைப் பேட்டிகாண இருப்பதாகவும் அரசாங்கத்தின் சுற்றறிக்கை 700க்கு முரணான இச்செயலை எதிர்த்து சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுக்கலாமா என்பது பற்றி தாங்கள் ஆலோசித்து வருவதாகவும் கூறினர்.

—

### தி. மு. க. வெற்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லான ஆசனங்களை சட்டசபையில் நிச்சயம் பிடிக்கும் என்று நம்பலாம். சுதந்திரக் கட்சியின் முதலாளித்துவ நோக்கங்களுக்கும் வட இந்திய சிண்டிகேடர்களின் இந்தி வெறிக்கும் தமிழ் நாட்டு மக்கள் இம்முறை சரியான பாடம் கற்பிப்பார்கள்.''

## சோசலிசமாம் சோசலிசம்..!

அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவின் பொது நிருவாக திணைக்களத்தில் கடமையாற்றும் எல்லா அரசாங்க ஊழியர்களின் மேசைகளிலும்—அந்தந்த மேசைக்குச் சொந்தமான ஊழியரின் பெயர் அட்டை ஒன்று தயாரித்து மேசையில் வைக்கப்பட்டிருக்கிறது. முக்கோண மரத்துண்டில் ஒட்டப்பட்டு மேசையில்வைக்கப்பட்டிருக்கும் இவ்வட்டையில் மேசைக்குரிய ஊழியரின் பெயர் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளது. தமிழ் ஊழியர்களின் மேசையிலும் சிங்கள ஆங்கிலப் பெயர் அட்டைகளே காணப்படுகின்றன; தமிழன் பெயரே தமிழில் இல்லை— இந்த அநியாயத்துக்குத் தான் 'சோசலிசம்' என்று பெயரா?

—

### தினபதியார்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கிலத்தில் தான் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்கிறார் என்று நான் கூறுவேனா அவர் பிரதமருக்கும், ஏனைய அமைச்சர்களுக்கும் எழுதிய தமிழ்க் கடிதங்கள் 'கன்சாட்டில்' வெளிவந்திருக்கின்றனவே. இதை மறைக்க முயல்வது பைத்தியக்காரத்தனம் அல்லவா என்றும் வருத்தத்துடன் தெரிவித்தாராம்.

தினபதியார் ஆட்டுகிற ஆட்டுக்கு சரக்கில்லாத தியாகராசா, ராஜன் செல்வநாயகம், துரையப்பா போன்ற பிறவிகள் ஆடித் [illegible] வார்கள் இவர்கள்?

## அண்ணாதாசனை தாக்க சோசலிசக் காடையர் சதி!

'ஊர்காவற்றுறையில் 'சிங்கள சோசலிசம்' பேசும் துரோகிகள் திலகம் கதிரவேலுவின் கூட்டத்தைச் சேர்ந்த காடையர் சிலர், தமிழரசுக் கட்சித் தொண்டரும் தமிழ்த் தாய் மன்ற பிரமுகர்களில்ஒருவருமான திரு. அண்ணாதாசன் அவர்களை நடு இரவில் தாக்க சதித்திட்டம் தீட்டினார்களாம். வேலணை புளியங்கூடல் சந்தியில் வைத்து இக் காடையர் கூட்டம் அண்ணாதாசன் அவர்களைத் தாக்க முயன்றதாகத் தெரியவருகிறது.

திரு அண்ணாதாசன் அவர்கள் இந்நிகழ்ச்சி பற்றி சுதந்திரன் நிருபருக்கு கருத்துத் தெரிவிக்கையில், 'இரவு வேளையில் அவர்கள் என்னைத் தாக்க வந்தார்கள். திடீர் சிறீலங்கா கட்சிக்காரர்களான அவர்களை நான் நன்கு அறிவேன். கொள்கையைப் பொறுத்தவரை அவர்கள் இரவிலே நடமாடும் கணிகையர் போன்றவர்கள் குணத்தைப் பொறுத்தவரை அவர்கள் இரவிலே நடமாடும் கள்ளரைப்போன்றவர்கள்' என்று குறிப்பிட்டார்.



அண்மையில் திருமலை நகரசபைத் தலைவர் தேர்வு நடைபெற்று முடிந்த பின்னர் புதிய தலைவரும், உபதலைவரும் திருமலை பா. உ. திரு. பா. நேமிநாதனுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம் இது: இடமிருந்து வலமாக திருவாளர்கள் ஜெ. சி. ஏ. அல்பட், வழக்கறிஞர் எம். கே. செல்வராசா, ரி முருகையா, சே. சிறிஸ்கந்தராசா, எஸ். கருணைநந்தசாமி, பா. நேமிநாதன் நா. உ, டாக்டர் வி. தம்பியையா (தலைவர்,) க. கோபாலகிருஷ்ணன் (உபதலைவர்) எஸ். இராசரத்தினம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பகைவர் எங்கோ மறைய

## இங்குள்ள தமிழர் ஒன்ருகச் சேர்ந்தார்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே — வாளோடு முன் தோன்றிய மூத்த குடித் தமிழர் வரலாற்றுக்கு அப்பாற்பட்ட பெருவாழ்வு கண்ட இனத்தவர்.

சிந்து நதிப் பள்ளத்தாக்கில் செந்தமிழர் நாகரிகம் சிறந்திருந்த சரிதையும், ஹாரப்பா மொகஞ்சதாரோ சிற்பங்கள் தமிழர் யாரப்பா எனக் கேள்வி கேட்டவர்க்குச் சான்றும் பகருகின்ற காலமிது.

ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட பெருமையையும்— பெருவாழ்வையும் சிந்தித்துச் செயற்படாத தமிழர், தங்கள் வாழ்வுக்கு வேட்டு வைத்து ஒற்றுமையற்ற காலத்தையும், சூழ்நிலையையும் வரலாற்றையும் — உருவாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர் வரலாற்றைப் பேசி— சிந்தித்து அவர்கள் அடிச்சுவட்டையே பின்பற்றித் தமிழினத்தைப் பிளவுபடுத்திய நிகழ்ச்சிகளைக் கடந்த காலங்களில் கண்டுகொண்டோம்.

இந்நிலையில், தமிழர் சரித்திரத்தில் மறக்கமுடியாத புதியதோர் சகாப்தத்தை உருவாக்கக் கூடிய உன்னதமான சம்பவம் வீரத்தின்— விவேகத்தின் விளைநிலமான வல்வெட்டித்துறையில் நடந்தேறியிருக்கின்றது.

காலத்தால் ஒன்றுபடமுடியாத தலைவர்களை — ஒற்றுமைப் பலத்தால் — தமிழர் பலத்தால் இணைத்துவைத்த பெருமை வல்வெட்டித்துறை வாலிபர்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

நாடும்—நம் தமிழ்ச் சாதியும் நலிவுற்று—நலம் பல இழந்து நரக வேதனை அனுபவிக்கும் இன்றைய அரசியல் வானில் நீதிகேட்க—தமிழ்ச் சாதியின் துயர் போக்க— உரிமை காக்க— உயர் வளிக்க ஒற்றுமைக் குரலெழுப்பிய இளைஞர் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பாயும் இன உணர்ச்சி வெள்ளத்திற்கு வெகுமதியும்—பெருமதிப்பும் அளித்திருக்கின்றார்கள் தலைவர்கள்.

உலகத் தமிழர் வரலாற்றில் உறுதிப்படுத்தப்பட்டதும், அழிவுப்பாதைக்கு அடிக்கல் நாட்டப்பட்டதுமான ஒற்றுமையற்ற தமிழர் என்ற கறைபடிந்த கதையைப் [illegible] கழிக்கு அனுப்பி புதிய சரித்திரத்தை உருவாக்கி [illegible]ப்பட்ட பைந்தமிழர் உள்ளத்திற்கு ஆறுதலும்—நல்ல தேறுதலும் அளிக்கப்பட்டுள்ளது.

ஆண்ட பரம்பரை மீண்டுமொருமுறை ஆள நினைப்பதைச் செயற்படுத்த—மூண்டிடும் விடுதலைத் தாகத்தால் முடுக்கி விடப்பட்ட வாலிபர் கூட்டம் படை நடத்தத் தலைவர்கள் ஒன்று படமாட்டார்களா? என ஏக்கமும் மனத் தாக்கமும் ஏற்பட்டு ஊக்கமுடன் செயலாற்றிக் கொண்டிருக்க

சேர — சோழ — பாண்டியர் அடிச்சுவட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவர்களா ஒன்றுபடுவர் என ஒதுக்கி நின்று வீம்பு பேசியோர் வியப்படைய,

சரஸ்வதி மண்டபத்திலும் சிங்கள சிறீ எதிர்ப்பிலும் சமரசம் பேசப் புறப்பட்டு சகதியைப் பூசிக் கொண்டு—பழைய சரித்திரத்தைப் படைப்பித்துக் கொண்ட தலைவர்களா ஒற்றுமைப் படுவர் எனக் கேலி பேசியோர் குலை நடுக்கம் கொள்ள,

ஆட்சியாளர்க்கு அன்னக் காவடி தூக்கி—அவர்கள் தம் முதுகு சொறிந்து வாழ்வதிலே இன்பங் கண்டு—கூலிக்கு நிலச் சேலைக்குப் பின்னால் மாரடிக்கும் கூட்டத்தவர் கதிகலங்க,

சோசலிசம் பேசி—நாம் தமிழர் என்ற சோசலிசம் இல்லாத நீசத்தனம் புரியும் வேஷதாரிகள், விபீஷணர் கூட்டத்தோர் வெருட்சி கொள்ள,

பந்தம் பிடிப்பதிலே பயிற்சியும் பரிசும் பெற்று— சொந்த இனம் நொந்து வாழ கொண்ட கொள்கைக்குக் குந்தகம் செய்யும் கோமாளிக் கூட்டத்தோர் சிந்தனையில் மூழ்க—பைந்தமிழர் இனத்தின் பயங்கர வாழ்வுக்கு நிரந்தரப் பரிகாரம் காண வேற்றுமைக்கு மத்தியிலே ஒற்றுமை கண்ட தலைவர்களுக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் கடைப்பாடுடையதாக இருக்கின்றது.

### 'ஈழத்துநாகன்'

தமிழர் பிரதேசம் பறிபோய்க்கொண்டிருந்த பயங்கர வேளையில் ஏற்படாத ஒற்றுமை,

சங்கத் தமிழ் சிங்காசனத்தால் இறக்கப்பட்டுச் சீரழிந்த போது உருவாகாத ஒற்றுமை,

சிங்களவெறி அங்கமெல்லாம் பரவியதால் விஷம் ஊறியதால்-நிலை தடுமாறியதால் தமிழர் தொழில் பறிபோன நிலையில் சோற்றுப் பிரச்சினை ஏற்பட்ட போது கைகூடாத ஒற்றுமை,

இன்னும் எத்தனையோ வழிகளில் தமிழர் வாழ்விழந்து, வளமிழந்து அநாதைகளாக அரசியல் பாலைவனத்தில் அவஸ்தைப் பட்ட போது அனுகூலமாகாத ஒற்றுமை இப்போது மட்டும் எப்படி ஏற்பட்டது என்று நச்சரிப்புக் கொள்ளும் நயவஞ்சகப் பேர்வழிகள் கச்சிதமாய்க் கூறிக் கலகத்தை மூட்டி ஒற்றுமையைக் குழப்பிவிட்டு ஆட்சியாளர்களான எசமானர்களிடம் நற்சான்றிதழ் பெற்றிட முனைந்தால் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாக முடிந்துவிடும்.

ஊர் இரண்டுபட்டதைக் கூத்தாடியான சிங்களக் கட்சிகள் பயன்படுத்தி தமிழினத்தை வேரோடு சாய்த்துவிட வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தன. இந்த சோதனையான காலத்தில் தமிழன் வேதனையோடிருந்தான். பாதகம் பல புரியும் மாற்றான்களைத் தலைவர்கள் தனித்து நின்று எதிர்த்தார்கள் பயனெதுவும் ஏற்படவில்லை. அதற்கு மாறாகத் தமிழினம் சிறுகச் சிறுக அழிக்கப்படும் அவலட்சணக் காட்சி ஆட்சியாளர் அகக் கண்களில் பட்டுத் தெறிப்பதைக் கண்டு கொள்ளவும்— அடுத்துக் கெடுப்பதும்—சிறு சலுகைகளைக் கொடுத்துக் கெடுப்பதும் நண்பர்களாக நடித்துக் கெடுப்பதும் அவசிய மேற்பட்டால் பலாத்

(11ம் பக்கம் பார்க்க)

### வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

ஆசிரியர் கோவை மகேசன் தமிழ் நாட்டுத் தேர்தல் நிலவரங்களை நேரில் பார்வையிட தமிழகம் சென்றுள்ளதால், அவரது வழமையான எழுத்தோவியங்கள் இவ்வார சுதந்திரன் இதழில் இடம்பெறவில்லையென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## பழுகாமம் கிராமச் சபை தேர்தலில் தமிழரசுக் கட்சி அமோக வெற்றி

### தலைவராக பூ செல்லத்துரை தெரிவு

(களுவாஞ்சிகுடி நிருபர் சன்)

பட்டிருப்பு தொகுதியைச் சேர்ந்த பழுகாமம் கிராமச் சபைக்கான புது அங்கத்தவர்கட்கான தேர்தல் அண்மையில் நடைபெற்றது. 9 வட்டாரங்களைக் கொண்ட இக்கிராமச்சபை தேர்தலில் 5ல் தமிழ் அரசுக் கட்சி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

பின் அதன் தலைவராக பெரிய போரதீவு தமிழ் அரசு வாலிப முன்னணித் தலைவரும் 3ம் வட்டார அங்கத்தவருமான திரு. இ. செல்லத்துரை அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் பச்சோந்திகளிடம் அகப்பட்டு இருந்த பழுகாமம் கிராமச் சபை தமிழ் மக்களுக்கு எதுவித தன்மையும் செய்ததாய் தெரியவில்லை என்பதை இத்தெரிவு நன்கு மக்களுக்கும் இப்பகுதி பச்சோந்திகட்கும் ஒரு நல்ல பாடமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க புதிய தலைவர் செல்லத்துரை அவர்கள் கூறியதாவது: நான் நம் தலைவர்கள் காட்டிய பாதையையே பின் பற்றுவேன். இதுவரைகாலமும் இப்பகுதி மக்கள் உண்மையை உணராமல் மகுடிக்கு கட்டுப்பட்ட நாகம் போல் இருந்துவிட்டார்கள். ஆனால் தற்போது இந்நிலை நீங்கி விட்டது. மக்கள் உண்மையை உணர்ந்துவிட்டார்கள். இதுவரை காலமும் விட்ட பிழைகள் போன்று நடைபெற விடாமல் விழிப்பாய் இருப்பார்கள் என்று தெரிவித்தார்.

மேற்படி தலைவர் தெரிவு நடைபெற்ற பின் தலைவர் பூ. செல்லத்துரை அவர்கள் நேரடியாக களுவாஞ்சிகுடியில் உள்ள தமிழ் அரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்களிடம் வந்து ஆசீர்வாதம் பெற்றுச் சென்றார். அன்னாரது பிறப்பிடமாகிய பெரிய போரதீவில் ஒரு பெரும் வரவேற்பு மேற்படி கிராம மக்களால் அளிக்கப்பட்டது.

## ஒன்பது அம்ச ஒப்பந்த உடன்படிக்கை இதோ!

தமிழினத்தின் குறைந்த பட்சக் கோரிக்கை.

1971ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ம் திகதி வல்வெட்டித்துறையில் கூடிய இலங்கைத் தமிழரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈழத்தமிழர் ஒற்றுமைமுன்னணி, தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகிய நாலு கட்சிகளின் உறுப்பினர்கள் விவாதித்து, தமிழ் இனத்தின் சார்பில் அரசியல் நிர்ணய சபைக்கு கீழ்க் கண்ட குறைந்த பட்சக் கோரிக்கைகளை விடுப்பதென்றும், இவையே இலங்கைவாழ் தமிழ் இனத்தின் குறைக்கமுடியாத கோரிக்கைகள் என்று பிரகடனப் படுத்துவதென்றும் தீர்மானிக்கின்றனர்.

கோரிக்கைகள்:-

(1) சிங்களமும் தமிழும் இந்நாட்டின் அரசாங்க மொழிகளாக இருக்க வேண்டும். அவற்றின் திட்டவட்டமான உபயோகம் பற்றிய விபரங்கள் அரசியல் சாசனத்தில் இடம்பெற வேண்டும்.

(2) சிங்களமும் தமிழும் இந்நாட்டின் நிர்வாக மொழிகளாக இருக்கவேண்டும். [illegible] முதலியவற்றில் அவ்விரு மொழிகளின் உபயோகம் பற்றிய விதிகள் அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட வேண்டும்.

(3) இலங்கையின் எப்பாகத்தில் வாழும் சிங்களவரோ, தமிழரோ தங்கள் தாய் மொழியில் அரசாங்கத்துடன் கருமமாற்றும் உரிமை இருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு பிள்ளைக்கும் சிங்களமோ, தமிழோ அவரவர் தாய்மொழியே போதனாமொழியாய் இருத்தல் வேண்டும். திறமையின் அடிப்படையில் இலவசமாக அக்கல்விக்கு வசதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

(5) உயர் தரக் கல்வி நிலையங்களில் சேருவதற்கோ, அரசாங்க சேவையில் சேருவதற்கோ, தன் தாய் மொழியில் பரீட்சை எடுத்து தன் தகுதியை நிரூபிக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

(6) அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்களை ஆட்சேபிக்கவோ, நிர்வாக ஒழுங்குகளைப் பற்றியோ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும் உரிமை அரசியல் சாசனத்தில் அமைய வேண்டும். நீதி நிர்வாகத்தில் எவ்வித அரசியல் தலையீடும் இருத்தல் ஆகாது.

(7) இந்நாட்டு மக்களிடையே நிலவும் சாதிபற்றியும், சமயம் பற்றியும், இந்திய அரசியல் அமைப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட விதிகள் இங்கும் சேர்க்கப்பட வேண்டும்.

(8) இலங்கைக் குடியரசு சமயச் சார்பற்ற அரசாக இருத்தல் வேண்டும். ஆனால் பௌத்தம், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைப் பாதுகாத்துப் பேணவேண்டும்.

(9) (அ) இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரும் அவரது தந்தை, அல்லது தாய் இலங்கையில் பிறந்தவராய் இருப்பின்

(ஆ) இலங்கைக்கு வெளியில் பிறந்தவராயினும் அவரது பெற்றோர் இலங்கைக் குடியுரிமைக்கு தகுதியுடையவராயின்

(இ) 15-11-48இலிருந்து தொடர்பாக இலங்கையில் வசிப்பவராயும், இலங்கைப் பிரஜையாக இருப்பதற்கு விரும்புபவராயும் இருப்பின், -

அவர்கள் எல்லோரையும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் அரசியல் அமைப்பில் சேர்க்கப் படவேண்டும். வம்சாவழிப் பிரஜைக்கும், பதிவுப் பிரஜைக்கும் வேறுபாடும் இருத்தல் ஆகாது. எக்காரணம் கொண்டும் ஒருவருடைய பிரஜா உரிமையும் பறிக்கப்படலாகாது.

சி. சுந்தரலிங்கம்
அ. அமிர்தலிங்கம்
வ. நவரத்தினம்
[illegible]
தி. பரமானந்தராசா
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய முன்னணி ஆட்சியின் சோசலிசம் தமிழ் மக்களை கொல்லும் நாகவிஷம்

## யாழ்நகர் அண்ணா நினைவுக் கூட்டத்தில் உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் முழக்கம்

இளைஞர்களே! மாணவர்களே! தாய்மாரே! பெரியோரே! உங்களனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள் உரித்தாகுக.

யாழ்ப்பாணத்து மக்கள் இடையே குறிப்பாக இளைஞரிடையே—இன்று ஒரு புத்துணர்ச்சியும் புதுத்துடிப்பும் ஏற்பட்டிருப்பதைக் காண நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆளுவோருக்கு மாலைகள் தோரணங்கள் ஆலவட்ட மரியாதைகள் எடுத்து இங்குள்ள சிலர் அருந்தமிழ் இனத்தின் மான உணர்ச்சியை அடகு வைக்கும் அதே வேளையில் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் கறுப்புக் கொடிகள் கண்டனச் சுவரொட்டிகள் காட்டி அமைச்சர்களின் முகங்களில் கரிபூசி அனுப்பும் காட்சி புலவனை என் நெஞ்சில் புதிய பாடல்களை உருவாக்கித் தந்திடக் காண்கிறேன்.

### தமிழினம் விழித்து விட்டது

தமிழினம் விழித்து விட்டது! ஈழத்தில் தான் போராடித் தீருவதைத் தவிரத் தனக்கு வேறு வழியில்லை என்று முடிவு எடுத்து விட்டது! தமிழ் மாணவரிடையே காணப்படும் புதிய எழுச்சி இதற்கான ஓர் அறிகுறியே தவிர வேறில்லை,

இந்நாட்டில் 'சோசலிசம்' மலர்ந்து வருவதாகச் சிலர் சொல்கிறார்கள். உண்மையான 'சோசலிசம்' இங்கு வருமானால் அதை ஓடி வரவேற்கின்ற முதல் மனிதனாக நான் இருப்பேன். ஆனால் இங்கு 'சோசலிசமா' மலர்கிறது: சுத்த 'சிங்கள இசம்' அல்லவா மலர்ந்து கொண்டிருக்கிறது;

### தரப்படுத்தல் சோசலிசமா?

ஈழத்தில் உள்ள ஒவ்வொரு குடியானவன் வீட்டுக்கும் சென்று அவனுடைய மாதாந்த வருமானத்தை அளவிட்டு அவனுடைய குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்து—ஏழ்மை நிலையில்—பின் தங்கிய நிலையில்—முன்னேறாத நிலையில்—பொருளாதார ரீதியாகத் தாழ்ந்த நிலையில் இருக்கும் ஏழைக் குடிமகனின் பிள்ளை பல்கலைக்கழகம் நுழைவதானால் 240 புள்ளிகள் எடுக்க வேண்டும் என்றும், பணம் படைத்த நிலையில்—வருமானவரி செலுத்தும் நிலையில்—முன்னேறி சுகபோகம் அனுபவிக்கும் நிலையில் உள்ள பணக்காரக் குடிமகனின் பிள்ளை பல்கலைக்கழகம் நுழைவதானால் 257 புள்ளிகள் எடுக்க வேண்டும் என்றும் நீங்கள் 'தரப்படுத்தல்' முறையை வகுத்திருந்தால் 'ஆகா இது வல்லவோ சோசலிசம்' என்று நாங்களும் கூடத்தான் வாழ்த்தியிருப்போம். ஆனால் இந்த நாட்டில் நிகழ்வதென்ன? கண்ணை மூடிக்கொண்டு சிங்கள மாணவன் பல்கலைக் கழகம் செல்ல 240 புள்ளிகள் தமிழ் மாணவர் பல்கலைக் கழகம் செல்ல 257 புள்ளிகள் என்று அல்லவா கூறுகிறீர்கள்-இது என்ன சோசலிசம்?

### இனவெறியனுக்கு நினைவுச் சின்னம்

ஈழத்தின் தேயிலைத் தோட்டத்திலே இந்த அரசாங்கத்தினர் ஆட்சிக்கு வந்த பிறகு கினக்கொல்லை என்னும் இடத்தில் தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். சுட்டதுதான் தெரியாமல் சுட்டு விட்டீர்கள் என்று கூட உங்களை மன்னித்து விடலாம்-இறந்த அந்தத் தொழிலாருக்கு நீங்கள் நினைவுச் சிலையொன்று எழுப்பி உங்கள் துக்கத்தையும் மரியாதையையும் செலுத்திருந்தால்... செய்தீர்களா? தமிழருக்கு கொஞ்சமான உரிமையைத் தந்த தமிழ் மொழி சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தை எதிர்த்து ஊர்வலம் நடத்தி சட்டத்தை மீறியதற்காகச் சுட்டுக் கொல்லப்பட்ட இன மத வெறியனான இரத்தினசார, தேரோ, என்ற புத்த பிக்குவுக்கு அல்லவா நீங்கள் நினைவுச் சின்னம் எழுப்பியிருக்கிறீர்கள்? இது என்ன சோசலிசம்?

### இது என்ன சோசலிசம்?

இந்தியாவில் முதலாளித்துவ கட்சிகளான 'சிண்டிக்கேட்' காங்கிரசையும் 'சுதந்திராக் கட்சியையும்' ஆதரிக்கும் 'இலஸ்ட்ரேட்டட்வீக்லி ஆப் இந்தியா' என்ற பத்திரிகையை ஈழத்துக்கு வர விடாமல் நீங்கள் தடுத்திருந்தால் நீங்கள் சோசலிசவாதிகள் தான். ஆனால் அப்பத்திரிகையோ ஆயிரக் கணக்கில் ஈழத்துக்கு இறக்குமதியாக அனுமதிக்கிறீர்கள்—ஆனால் ஏழைகளுக்கு நிலப் பட்டா வழங்கி—சாதாரண மானவனும் கோயில் அர்ச்சகனாகலாம் என்று சாதியை நொறுக்கிச் சட்டம் கொணர்ந்த சோசலிச சக்திகளோடு அங்கே கூட்டுச் சேர்ந்திருக்கிற கருணாநிதியின் 'முரசொலி' பத்திரிகை இந்நாட்டுக்கு வரவிடாமல் சட்டத்தால் அமுக்கங்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறீர்கள்: கருணாநிதி தமிழன் என்பதால்தானே இப்படிச் செய்கிறீர்கள் — இது என்ன சோசலிசம்?

### சோசலிசம் நாகவிஷம்

தோழர்களே! இந்த நாட்டில் 'சோசலிசம்' என்பது தமிழர்களைச் சாகடிக்கும் என்பது 'நாகவிஷம்' என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்!

தமிழினத்தை அரசாங்கம் குழிதோண்டிப் புதைக்க சதித்திட்டங்களைத் தீட்டிவரும் இந்த நேரத்தில் 'ஏன் இந்த அரசாங்கம் நமது யாழ்ப்பாணத்துக்கு 'லைட்' பூட்டித் தரவில்லையா? — மின் விளக்கொளியால் யாழ்ப்பாணத்தில் பொன் ஒளி பரவச் செய்யவில்லையா? யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் பல்கலைக்கழகம் கட்டித்தரப் போவதாகச் சொல்லவில்லையா? தமிழ்ப் பகுதிகளை அரசாங்கம் நன்றாகத்தானே வைத்திருக்கிறது' என்று துரோகிகள் சிலர் அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கிப் பேசிடுவதையும் நான் காண்கிறேன்.

### நண்பனின் கதை

நண்பர்களே! எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லதோர் கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது. என்னுடைய நண்பன் ஒருவன் இருந்தான்; அவன் ஒரு முழுக் கோழை, முது கெலும்பில்லாதவன். அவனுடைய மனைவியை—உரிமையான மனைவியை அவளின் விருப்பமில்லாமலே பலாத்காரமாக இன்னொரு கயவன் ஒரு நாள் கடத்திக் கொண்டு போய் அவளைத் தன் வீட்டில் சிறைவைத்து அனுபவித்துக் கொண்டிருந்தான். தன் உரிமையான மனைவியைப் பறித்துச் சென்று பலாத்காரம் செய்து வரும் அந்தப் பாதகனோடு சண்டையிட்டு-அவன் பல்லை உடைத்து மனைவியை மீட்டுவர வேண்டியது தானே என் நண்பனின் கடமை. ஆனால் கோழைப் பயல் அப்படிச் செய்யவில்லை; பேசாமல் விட்டு விட்டு இருந்தான். இருந்தது மட்டுமல்ல சில மாதங்களுக்குப் பிறகு என்னிடம் வந்து அந்த மனிதன் என் மனைவியை நன்றாக வைத்திருக்கிறான்— பரவாயில்லை—நன்றாகக் கவனிக்கிறானும்—அவளுக்குப் பூணாரங்கள் செய்து போட்டிருக்கிறானும். கழுத்துக்கு ஒரு மரங்காய் மாலை வாங்கிக் கொடுத்திருக்கிறானும் என்றெல்லாம் தன் மனைவியைத் திருடிய அந்த அயோக்கியனைப் புகழ்ந்து கொண்டிருந்தான். இவனை என் நண்பனென்று சொல்லவே வெட்கமாக இருக்கிறது. — இந்த நண்பனை—இல்லை— இயலாக் கோழையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

தமிழரின் உரிமைகளையெல்லாம் பறித்து எடுத்து விட்டு தமிழனைத் தங்கள் அடிமையாக வைத்துக் கொண்டு அவனுக்கு பாலமும் பள்ளிக் கூடமும் பல்கலைக்கழகமும் மின்விளக்கு வசதியும் செய்து [illegible] திய சிங்கள ஏகாதிபத்தியத்தை தியாகராசா, குமாரசூரியர், அல்பிரட் துரையப்பா, ராஜன் செல்வநாயகம் ஆகியோர் புகழ்ந்திடும் போது எனக்கு இந்த நண்பனின் கதைதான் ஞாபகம் வருகிறது தோழர்களே!

### அண்ணாவிழாவில் பேச உனக்கென்ன யோக்கியதை?

நண்பர்களே, ஈழத்தில் கடந்த சில நாட்களாக இன்னொரு பெரிய புதுமை நடந்து வருவதை நீங்கள் கண்டிருப்பீர்கள்; அண்ணா விழாவில் யார் யாரோ எல்லாம் இப்போது மேடையில் ஏறி அண்ணாவின் பெருமை பேசத் தொடங்கி இருக்கிறார்கள்—அநியாயமே! வட்டுக் கோட்டை தியாகராசா கூட அண்ணாவைப்பற்றிப் பேசுகிறார்!

> உயிர் தமிழுக்கு
>
> ## களை எடுப்பு
>
> களை எடுப்போம் வாரீர் தமிழரே!
> தமிழரைக் காட்டிக் கொடுக்கும் தமிழர்
> தலை எடுப்போம் வாரீர்! மீண்டும் நாம்
> தலையெடுக்க வேண்டுமாயின் இவரை
> முளைதனிலே கிள்ளி எறிதலே
> முதல் வேலை! ஓடிப் புறப்படுங்கள்!
> கொலை நெடுவாள் தூக்கி இவர்சிந்தும்
> குருதியிற் பகைவரை மூழ்கடிப்போம்!
>
> நெடுங்கடலை நாங்கள் அடக்கலாம்
> புயலை நிறுத்திப் போர் செய்திடலாம்!
> சுடும் அனலை வென்று நொடிப் போழ்தில்
> கொடியும் தூக்கலாம்... போராடி மாற்றார்
> விடுங்கணைகள் கோடி எனினும் போய்
> எதிர்நின்று வென்றிகொண்டுவரலாம்!
> கொடுங் களைகள் இருக்கும் வரை நாங்கள்
> இவை செய்யோம்...களை கொளுத்துவீரே!
>
> நிறை கருவில் எம்மைப் பல திங்கள்
> சுமந்த தாயெனினும் சரியே! இன்னல்
> சிறிதளவு மின்றி எமை வளர்த்துச்
> சிறப்பீந்த தந்தை எனினும் சரியே
> உறுபகைவர் நட்பில் மகிழ்ந்தெங்கள்
> தமிழருக் குலைவைப்பராயின் ஓடி
> வெறியொடவர் உடல்கள் விழுத்துமின்...
> அதன் பின்போர் விழாவும் நடத்திவைப்போம்!
>
> —காசி ஆனந்தன்

அண்ணா விழாக்களில் கலந்து கொள்ளும் தோழர் வ: பொன்னம்பலம் வட்டுக்கோட்டை தியாகராசா அமைச்சர் குமாரசூரயர் ஆகியோரிடம் நான் ஒன்று கேட்பேன்— அண்ணாவைப் பற்றிப் பேச உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது! ஒவ்வொரு ஆண்டும் ராஜாஜிக்கு வேண்டுமானால் விழா எடுத்து ராஜாஜி விழாவில் பேசுங்கள்—அண்ணா விழாவில் ஏன் பேசுகிறீர்கள்?

### ராஜாஜிக்கு விழா நடத்துங்கள்

1937 ஆம் ஆண்டு தமிழ் நாட்டுப் பள்ளிக் கூடங்களில் பாடமொழியாக இந்தியைக் கொணர்ந்து திணித்தவர் ராஜாஜி.

அதே போல இன்று இலங்கையிலுள்ள தமிழ்ப் பள்ளிக் கூடங்களிலும் யாழ்ப்பாணத்தில் கட்டப்படவிருக்கின்ற பல்கலைக் கழகத்திலும் சிங்களத்தைப் பாடமொழியாகக் கொணர்ந்து திணிக்கத் துடிப்பவர்கள் நீங்கள்.

ராஜாஜி வடநாட்டானின் கையாளாக இந்தியைத் திணித்தார். நீங்களோ சிங்கள ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளாக சிங்களத்தை திணிக்க இருக்கிறீர்கள்.

ராஜாஜிக்கு விழா எடுப்பதுதானே உங்களுக்குப் பொருத்தமான வேலை. ராஜாஜியின் விழா மேடையிலல்லவா நீங்கள் ஏற வேண்டும்;

ராஜாஜி இந்தியைக் கொணர்ந்தபோது அதை எதிர்த்துப் போராடித் தன் வாழ்வில் முதன் முறையாகச் சிறைத் தண்டனையை ஏற்றவர் அண்ணா. அதே போல இங்கு பாடமொழியாகச் சிங்களம் வருமா? வரட்டும்—போராட்டம் நடத்திக் காட்டுகிறோம் என்று துடித்து நிற்கும் நாங்களும் எங்களைச் சார்ந்தவர்களும் தானே அண்ணா விழாவில் கலந்துகொள்ளவேண்டும் — உங்களுக்கு 'அண்ணா மேடை' யில் என்ன வேலை?

அண்ணாவின் சிலையைத் திரைப்படத்தில் காட்டக் கூடாது என்று கொழும்பிலே தடைபோடுகிறது உங்கள் அரசாங்கம் —இங்கே நீங்கள் அண்ணா விழாவில் பேசுகிறீர்கள்... அண்ணா விழா!

### இரண்டு அம்மையும் ஒன்று?

தோழர்களே! என் அருமை நண்பர் வ. பொன்னம்பலம் இன்னொரு நியாயம் பேசுகிறார். தமிழகத்தில் கருணாநிதி சோசலிச சக்திகளோடு—இந்திரா அம்மையாரோடு கூட்டுச் சேர்ந்திருக்கிறார்களாம் — இங்கே தமிழ்க்கட்சிக்காரர்கள் சோசலிச சக்திகளோடு—சிறீமாவோ அம்மையாரோடு கூட்டுச் சேர்ந்தால் என்ன? என்று கேட்கிறார். தர்க்கத்துக்கு அழகான கேள்வி;

நான் தோழர் பொன்னம்பலம் அவர்களுக்கு ஒன்று சொல்லுவேன்... தோழரே! தமிழ் நாட்டுக்கு இருந்த 'மெட்ரூஸ்' என்ற பெயரை மாற்றி தனித் தமிழில் 'தமிழ் நாடு' என்று அண்ணா பெயர் வைத்தபோது அதை மனமார ஏற்றுக்கொண்டவர் இந்திரா அம்மையார்; ஆனால் இங்கே—விஜயன் வருவதற்குமுன்பே— 'இலங்கை' என்றும் 'ஈழம்' என்றும் இருந்த அழகான தமிழ்ப் பெயரை மாற்றி புதிய அரசியல் அமைப்பில் 'ஸ்ரீலங்கா' என்று தனிச் சிங்களப் பெயராக அல்லவா ஆக்கப்போகிறார்கள். தமிழில் 'ஸ்ரீலங்கா' என்றுதான் அழைப்பார்களாம். இலங்கை என்று சொல்லக் கூடாதாம்.

தமிழ்நாட்டின் தனிப் பெரும் கவிஞனான பாரதியின் பாடலுக்கு அங்குள்ள இந்திரா அரசாங்கம் இந்திய வானொலியில் தடைபோட்டதில்லையே! இங்கு அம்மையார் ஆட்சி தடைபோட்டதே!

அங்கே மாநில சுயாட்சிப் போராட்டம் நடத்த உள்ள கருணாநிதியைப் பார்த்து சோசலிஸ்ட்டுகள் 'இவன் ஒரு வகுப்புவாதி இவனோடு நமக்கென்ன கூட்டு' என்று ஒதுங்கவில்லையே— இங்கே... வகுப்புவாதிகள் என்றல்லவா எங்களை வசைபாடுகிறார்கள் சோசலிஸ்டுகள்!

இந்திரா அம்மையாரும் சிறீமா அம்மையாரும் எந்த விதத்தில் தோழரே ஒன்றானவர்கள்? கருணாநிதியை

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்மகன் வாரானே?

—'தமிழ் வேந்தன்'

அமிழ்தினும் இனியமொழி—தமிழ்
அகிலமும் புகழும் மொழி—தமிழை
தமிழன் மறந்து விட்டான—தன்
'தனிக் குணம்' காட்டிவிடான்!

ஈழமெலாம் ஆள—பிறிதோர்
இனத்தோன் துடிதுடிக்க—தமிழன்
வாளா விருக்கின்றான்—இவன்
வாழ்வும் வேண்டுவதோ?

தாயை மதியாதான்—வறட்டுத்
தத்துவம் பேசுகிறான்—தெரு
நாயைக் கண்டவன்தான்—அவனுள்
நன்றியைக் காணவில்லை!

தமிழ்மகனைத் தன்னை—புவிக்குத்
தந்தோன் கோவிலிலும்—புரியா
'டமிள்மொழி' பேசுகிறான்—சுத்தம
டையன்!, மடியானோ?

ஈழோன் மிகக் கீழோன்—தாழ்ந்த
கேவல மனங் கொண்டோன்-பொய்யன்
ஆளை ஏய்த்தான்—'சாதியை'
ஆயுதமாய்க் கொண்டான்!

பணத்தைப் பதவியினை—நாடிப்
பண்பையும் விலைசெய்வான்—பிறந்த
இனத்திற்(கு) எட்டப்பன்—பாவி
இறக்கும் நாள் தமிழ்த் திருநாள்!

தலையே போனாலும்—தலை
வணங்காத் தன்மையினன்—தமிழன்
இல்லையோ இன்றிங்கே?—தமிழ்
இனமே பதில் கூறு?

அழகுத்தேன் தமிழும்—ஈழத்தில்
அவள்தன் குழந்தைகளும்—என்றும்
நலம்பெற போரிடுவான்—வீரன்
நன்மகன் வாரானோ?




மு. துரைசிங்கம்,
6ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

கே: எங்கள் பண்டிதருக்கும் பிரக்கிராசியாருக்குமுள்ள வேற்றுமையை எதற்கு ஒப்பிடலாம்.

ப: பண்டிதர் மயில் என்றால் உங்கள் பிரக்கிராசியார் வெறும் வான்கோழியென்று கூறலாம்!

கே: புங்குடுதீவில் சத்தியமாய் விரலைக்கிழித்து நவரத்தினத்துக்கு அன்றொரு நாள் திலகம் வைத்த ஈழத்துச் சிவானந்தன் என்ற சூனா கழகத்துக்காரரை எங்கே காணோம்?

ப: சூனாக்கழகத்திலிருந்து வெளியேறி வீதலைக்கு திலகம் சூட்ட இப்போது சுதந்திரக் கட்சியில் சேர்ந்துவிட்டாராம்!

ஃ

த. செந்தில்வாசன்,
யாழ்ப்பாணம்.

கே: 'காவடி' ராசாவுக்கும் அமிர்லிங்கத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: 'காவடி' குறைகுடம்; அமிர்தலிங்கம் நிறைகுடம்; காவடி அங்கொடையிலிருக்கவேண்டியது; அமிர்தலிங்கம் ஆட்சிமன்றத்திலிருக்கவேண்டியவர்!!

ஃ

இ. தவராசா,
திருநெல்வேலி வடக்கு
யாழ்நகர்.

கே: அகில யாழ் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்து (சின்டிக்கேட், இன்டிக்கேட்டாகி) சின்னத்தை பின் சில்லும் முன் சில்லுமாகப் பிரித்து இருபகுதியும் எடுத்துக் கொள்ளலாம் என்று சிலர் வேடிக்கையாகக் கூறுகின்றனர் இதில் உங்கள் கருத்து யாது?

ப: நல்ல திட்டம்—இருபகுதியினருக்குமே ''சைபர்'' தான் அடையாளமாக மிஞ்சும்! தமிழினம் இவர்களுக்கு அடுத்த தேர்தலில் 'சைபர்' போடவும் இது வசதியாக இருக்குமே!

ஃ

கோ. சன்முகம்,
காங்கேசன்துறை.

கே: இலங்கையிலிருந்து தமிழ்ப்பத்திரிகை இந்தியாவிற்கு செல்வதுண்டா?

ப: ஆமாம், சுதந்திரன், சிரித்திரன், கதம்பம் ஆகிய பத்திரிகைகள் செல்கின்றன;

கே: தமிழ் நாட்டில் நடைபெறவிருந்த தமிழ் பேரணி ஊர்வலம் குறிப்பிட்ட தேதியில் நடைபெற்றதா?

ப: இல்லை, ஒத்திவைக்கப் பட்டுள்ளது!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

**Wanted very large quantities of Tomatoes to be delivered to Jaela**

Please Write to

PERUMAL
51, SIR ERNEST DE SILVA MAWATA COLOMBO-7

## சங்கப் பலகை

### செங்கதிர்

'செங்கதிர் மலரிதழ்களால் சீரெழிலும்சிந்தனையும் அறிவாற்றலும் மிக்க நல்லதொரு சமுதாயத்தை நிர்மாணிக்க முடியும் என்கின்ற நம்பிக்கையின் விளைபொருளே உங்கள் கைகளில் அணைப்பிடை மலர்ந்துள்ள 'செங்கதிர்' முதலிதழாகும். எங்கள் சேவை மனப்பாங்கினாலும் உங்கள் தேவை காரணியாகவும் வெளிவருகின்ற நமது தமிழ்த் திங்கள் வெளியீட்டில் எந்த விதக் குறுகிய அரசியல்,பிரச்சார, வர்த்தக, குதர்க்கவாத நோக்கங்களேனும் கிடையவே கிடையாது. மாறாக நமது மாத இதழின் இதயம் மலரிதழினும் மென்மையும், தூய்மையும், உயர்குறிக்கோளும் கொண்டதே. மாணவர்களின் அறிவுப் பட்டினிக்கு பெரு விருந்துபோடுவதோடு பாமர வாசகர்கள் அனைவரினதும் அறிவியல் மானிடவியல் சார்ந்த இன்றைய தேவைகளை நிவர்த்தி செய்திடுவதுமே செங்கதிரின் தலையாய பணியாகும்' என்று 'செங்கதி'ரின் தோற்றத்தின் காரணத்தை 'எமது உதயம்' என்ற ஆசிரியர் தலையங்கத்தில் இவ்விதம் ஆசிரியர் இயம்பும் கருத்து எவரும் ஏற்கத்தக்க இனிய கருத்தேயாகும்.

இவ்விதம் ஏற்ற மிகு கருத்தை எடுத்து இயம்பும் இவ்வாசிரியர் அரசியலில் ஒரு கேள்விக் குறியாக விளங்கிய திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்களின் ஆங்கில வாழ்த்தை நாடியதும் தமிழ் இனத்தை ஒரு கலப்பினமாக்கி தமிழ் இனத்தின் அழிவில் தனி இன்பம் காணும் தபால் அமைச்சர் குமாரசூரியரின் வாழ்த்தை இதழுக்குப் பெற்றிருப்பதும் எமக்கு புரிய முடியாத புதிராகவே விளங்குகிறது.

ஏறக்குறைய 40 பக்கங்களோடு வெளிவந்துள்ள 'செங்கதிரில்' அறிவியல், பொருளியல், விலங்கியல், பொறியியல் எனப் பல துறைகளில் கட்டுரைகள் வெளிவந்து படிப்போர் கவனத்தை கவரும் முறையில் அமைந்திருப்பது பாராட்டுதற்குரியது: குறிப்பாக இன்றைய தேவையை நிறைவேற்றும் முறையில் உயர் நிலைப் பள்ளி மாணவர்களினதும் பல்கலைக் கழக மாணவர்களினதும் அறிவு வேட்கையைத் தீர்க்கும் அருமருந்தாக இச் 'செங்கதிர்' செவ்வொளி பரப்பி நிற்கின்றது.

விலை (அஞ்சற்செலவு உட்பட) தனிப்படி 50 சதம் ஆண்டுக் கட்டணம் ரூபாய் 7-விபரங்களுக்கு செங்கதிர்ச் செல்வர் பணிமனை திட்டம் 60, புங்கங்குளம் வீதி, கொழும்புத் துறை, யாழ்ப்பாணம்.

●

### நெஞ்சம்

ஆசிரியர்:
வேலணை ஆனந்தன்;
விலை: சதம் 75
முகவரி:-81/5, ஹம்டன் ஒழுங்கை, கொழும்பு-6:

ஈழத்தில் வெளியிடப்படும் தமிழ் சஞ்சிகைகள் மக்கள் மத்தியில் எடுபடாமல் போவதற்கு ஒரு காரணம் 'பாடப்புத்தகம்' போல அவை வெளியிடப்படுதலே. எவ்வளவுதான் நல்ல விஷயங்களை கொண்டிருந்தாலும் கவர்ச்சியுடன் அமையாத ஏடுகள் மக்களின் மனங்களில் படியமாட்டாது. இதனாலேயே தமிழ் சஞ்சிகைகள் இங்கு தோல்வியடைகின்றன.

ஆனால் வேலணை ஆனந்தனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள நெஞ்சம் எடுத்த எடுப்பிலேயே மக்களின் நெஞ்சங்களில் அழியாத இடத்தை பெறுமளவுக்கு அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் காட்சியளிக்கிறது. தோற்றம் மாத்திரமல்ல, உள்ளே இடம் பெற்றுள்ள விஷயங்களும் சிறந்தவையாகவும், புதிய முறையிலும் தரப்பட்டுள்ளன. பாரதிதாசன், கண்ணதாசன், காசி ஆனந்தன், அறிஞர் அண்ணா, கலைஞர் மு. க., அண்ணாதாசன் போன்றோரின் கட்டுரை, கதை, கவிதைகள் 'நெஞ்சத்தை' முழுமையாக்குகின்றன:

'நெஞ்சம்' உருவிலும், அமைப்பிலும், தரத்திலும் தமிழகத்து 'முத்தாரத்தை' நினைவுபடுத்துகிறது. 'நெஞ்சம்' தமிழர் நெஞ்சங்களை நிரப்புகிறது.

●

### சிலம்பொலி

ஆசிரியர்:-
பழையூர் சுந்தரம்பிள்ளை;
வெளியீடு:- கம்பன் கலைக் கழகம் தெல்லிப்பளை
விலை:- சதம் 25

'சிலம்பொலி'யின் இரண்டாவது இதழ் கிடைக்கப் பெற்றோம். தமிழகத்து ஏடுகளைத் தடைசெய்ய வேண்டுமென்று கூறித்திரியும் முற்போக்குக் குஞ்சுகளுக்கு சிலம்பொலி ஆசிரியத் தலையங்கம் தக்க சாட்டையடி கொடுக்கிறது. மற்றும் சிறுகதைகள், கவிதை, கட்டுரைகள் சிலம்பொலியை சிறப்பிக்கின்றன;

●


### காரை ஒளி

வெளியீடு:—
காரை அபிவிருத்திச் சபை
கொழும்பு;
விலை:—ரூபா ஒன்று

கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் முறையில் காரை அபிவிருத்திச் சபையின் வெளியீடான 'காரை ஒளி' பொங்கல் மலராக மலர்ந்துள்ளது— ஏறக்குறைய 40 பக்கங்களைக் கொண்ட இம் மலரில் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி. ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா, செல்வி செகசோதி செல்வன் நடராசா உட்பட பலர் எழுதியுள்ளனர்—

ஊர்ப்பற்று நாட்டுப்பற்றாக விரிந்து உலகப்பற்றாக மலர வேண்டும். அவ்வித பற்றின் வளர்ச்சிக்கு காரை [illegible] பின்பற்றுவார்களாக—

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜ பீடி
ஸ்பெஷல்

ராஜபீடி 'ஸ்பெஸல்

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

# எல்லாம் தமிழ் ஆகட்டும்! எங்கும் தமிழ் மணக்கட்டும்!

மக்கள் ஆட்சி மலர்ந்தது நம் நாட்டில். நாமெல்லாரும் மகிழ்ச்சிகொண்டோம் ஏன்? அடிமை வாழ்வு நீங்கிவிட்டதென்று. உண்மை அது வல்ல. தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஆளப்படுபவராகவும், சிங்கள மொழி பேசுவோர் ஆட்சியாளர்களாகவும் மாறிவிட்டனர். ஒத்துழைப்பும், ஒற்றுமையும் இல்லாத தமிழ் மக்களை காலத்திற்குக்காலம் ஆட்சியாளர் நசுக்குகிறார்கள். குடி, நில, உரிமைகள் மறுக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் விழிபோன்ற மொழியும் சூறையாடப்பட்டுவிட்டது.

இந்த நிலையிலும் நம்மவர்கள் ஆட்சியாளரின் போக்குகளுக்கு ஒத்துழைப்பை நல்கி மானத்தையே விலைபேசுகிறார்கள். இந்த நிலையை வளரவிட்டால் எமது எதிர்காலச் சந்ததி தமிழ்பேசும் மக்களாக இருக்கமுடியாது. அன்று ஆங்கிலேயன் விட்டுச்சென்ற விபச்சாரத்தின் சின்னங்களாக நடமாடும் ஒரு கூட்டத்தை நாம் இங்கு காண்கிறோம். இவர்களின் இரண்டும் கெட்டான் நிலை கண்டு துன்பப்படுகிறோம். அதே போல தமிழ்பேசும் பெருங்குடி மக்களும், தமிழர்கள் அல்லாமலும் சிங்களவர்கள் அல்லாமலும், கோவேறு கழுதைகள்போல வாழும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

நாம் மானமுள்ள தமிழர்களாக, நமது கலை, கலாச்சாரம், பண்பு, பாரம்பரிய தனிச் சிறப்பு, இவை அனைத்தும் பாழ்படா தவண்ணம் வாழவேண்டுமானால், தமது தமிழ்மொழிக்கு உயர்வு அளிக்கவேண்டும்; எப்படி? நமது அன்றாட வாழ்வில் தமிழ் மணக்க வேண்டும்.

ஆலை அரசசிகள், அதிகாடிச் சொந்தக்காரர்கள், பொதுமக்கள் அனைவரும் தமிழ்மொழியில் எதையும் செயயவேண்டும். ஊழியர் சேமநிதிப் பட்டியல் தயாரிக்கும்போது தமிழை உபயோகிக்கலாம்.

வருமான வரி இலாக்காவுடன் தொடர்புகொள்ளும் போது தமிழைத் தாராளமாக உபயோகிக்கமுடியும்.

இறப்பு, பிறப்பு, திருமணச் செய்திகளை தந்திமூலம் தமிழில் அனுப்பமுடியும்; இத்தனைக்கும் மேலாக அரசுடன் தொடர்பு வைக்கும்போது கண்டிப்பாக தமிழைப் பாவிக்கவேண்டும்.

தென்னிலங்கையில் வாழும் சிங்களப் பெருமகன் தன் மொழியில்தான் எதையும் செய்வான். அவர்களின்

**'கரவைச் சலீம்'**

உணர்ச்சி பெருமைப்பட வேண்டியது; புகழவேண்டியது;

நாம் தமிழர்கள் தமிழைப் புறக்கணித்தால் அடுத்தவர் எமக்கு உதவ வருவார்கள் என்பது மடமை.

வெள்ளையன் ஆண்டபோது மிலேச்ச மொழி கற்றோம். எனவே நமது சிங்களச் சகோதரர்கள் நம்மை அடிமைகளாய் ஆட்சிசெய்யும்போது சிங்களத்தை ஏன் நாம் கற்கக்கூடாது என்று வாதம் செய்யும் கூட்டமும் நமது மத்தியில் இருக்கிறார்கள். அவர்கள் அவர்களது அன்னையையும், அக்காள், தங்கைகளையும் விலைபேசவும் தயங்கமாட்டார்கள். அவர்களை நாம் மறந்துவிட்டு, நமது உயிரினுமினிய தமிழ் மொழியை அன்றாட வாழ்க்கையில் நடமாடச் செய்தால் மாற்றானும் மறுப்புக் காட்டாமல் நமது பொன் வாழ்வுக்கு உதவ முன்வருவான்.

எல்லாம் தமிழ் தமிழர் வாழ்க.

### இவரும் ஒரு தமிழ் ஆசிரியரா?

பளை மகா வித்தியாலயத்தில் ஒவ்வொரு பாட நேரத்திலும் ஓர் ஆசிரியர் பீற்றர் கெனமனைப்பற்றியும், என். எம். பெரேராவைப் பற்றியுமே பாடம் புகட்டுகிறாராம்.

இவர் 30-1-71 திகதி ஏழாம் வகுப்பிற்கு சென்று அங்குள்ள மாணவர்களுக்கு வழக்கமான பல்லவி பாடிவிட்டு வகுப்பிலுள்ள பிள்ளைகளைப் பார்த்துக் கேட்டாராம் 'இப்பொழுது தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகம் செய்தால் யார் யார் போய் சத்தியாக்கிரகம் செய்வீர்கள்' என்று அதற்கு அந்த வகுப்பிலுள்ள ஏழு மாணவர்கள் எழுந்து நாங்கள் செய்வோம் என்றனராம். இதற்காக அந்த மாணவர்களுக்கு அடியும் உதையும் விழுந்ததாம். இதனால் அப்பிள்ளைகளின் பெற்றோர் மனம் மிக நொந்து போய் இருக்கின்றனர். இந்த ஆசிரியர் தமிழரசுக்கட்சியை பற்றியும் இழிவாகபேசி வாராம்.

### தமிழ் இயக்கத் தொண்டர்களுக்கு!

தமிழ்ப் பகுதிகளிலுள்ள பாராளுமன்றத் தொகுதிகள் ஒவ்வொன்றிலுமிருந்து நூறுதொண்டர்கள் சேர்ந்தவுடன் அவ்வத் தொகுதியில் தொண்டர் முன்னணி நிறுவப்படும்.

பத்துப்பேர் கொண்ட உறுப்பு அணியெனவும் பத்து அணி கொண்ட பேரணி எனவும் அவை பேர் பெறும் ஒரு தொகுதியில் பத்து அணியும் ஒரு பேரணியும் இயங்கும்.

ஓர் அணிக்கு ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார். பத்து அணிகளின் தலைவர்களுஞ் சேர்ந்து பேரணித் தலைவரைத் தெரிவு செய்வார்கள். தொகுதிகள் தோறுமுள்ள பேரணித் தலைவர்கள் சேர்ந்து தலைமை அணியை நிறுவுவார்கள். இத் தலைமை அணியின் தலைவரையும் ஏனைய அலுவலாளர்களையும் தலைமை அணி உறுப்பினர்கள் தெரிவு செய்வர். எனவே தமிழியக்கத் தொண்டர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் பத்து அணிகளையும் ஒரு பேரணியையும் நிறுவ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்;

### தமிழியக்கத் தொண்டர் பட்டியல்

176 செ. பூபாலசிங்கம் தாவடி வடக்கு கொக்குவில் 177 செல்வி. ஜானகி, உடுவில் சுன்னாகம். 178 மா. சந்திரசேகரம் கொண்டாவில். 179 சி. சிவபாலன் அரியாலை, யாழ்நகர். 180 ச. சிவச்செல்வம், சிந்தன்கேணி. 181 தா. மோகனநாவுக்கரசு, சுழிபுரம் 182 க. பகலத்சிங்கம் காரைநகர் 183 செ. இராஜரத்தினம், காரைநகர்.

184 ஆ. இரத்தினசபாபதி, காரைநகர். 185 ந. கணேசமூர்த்தி, காரைநகர், 186 சாந்தகுமாரி இராஜதுரை வட்டுக்கோட்டை. 187 இ. விக்கினராஜா, சுழிபுரம். 188 செ. யோகநாதன், தெல்லிப்பழை.

189 ஏ. மேரி யூக்கறிஸ்ரா இளவாலை, 190 சு. ஆனந்தராசா அளவெட்டி, 191 சி. ஸ்ரீகனநாதன் அளவெட்டி, 192 ச. கதிர்காமத்தம்பி பதுளை, 193 இ. சிவராசா தெல்லிப்பழை, 194 சி. நடராசா அளவெட்டி, 195 சோதிமணி அமிர்தலிங்கம் அளவெட்டி, 196 தவமலர் அப்பாத்துரை அளவெட்டி, 197 அ. போகேஸ்வரன் அளவெட்டி, 198 வை. பாலகிருஷ்ணன் அளவெட்டி, 199 நா. சிவசுந்தரம் காங்கேசன்துறை, 200 வை. பாக்கியநாதன் தெல்லிப்பழை.

**தமிழியக்கத் தொண்டர் முன்னணி**

தேர்தல் தொகுதி.............................................

முழுப்பெயர்:.............................................

முகவரி:.............................................

.............................................

வயது:..............................

கல்வித் தகைமை:.............................................

தொழில்: (மாணவராயின் படிக்கும் பாடசாலையின் பெயர்)

.............................................

தேதி:..............................

தமிழியக்க தொண்டர் அணியின் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டு எனக்கிடப்படும் பணியை இனிது நிறைவேற்றுவேன் என உறுதி கூறுகின்றேன்.

..............................

கையொப்பம்

# கம்யூனிச எழுத்தாளர்களின் செலாவணி மோசடி அம்பலம்!

## தமிழ் நூற் கண்காட்சியால் ஏற்பட்டுள்ள பலாபலன்!

ஈழத்தில் தமிழ் நாட்டு நூல்கள் இறக்குமதியாவது தடை செய்யப்படல் வேண்டுமெனக் கூறும் முற்போக்கு எழுத்தாளர்களே தமது நூல்களை தமிழ் நாட்டில் அச்சிட்டு பல இலட்சக்கணக்கான ரூபாக்களை ஈழத்து வாசகர்களிடமிருந்து கவர்ந்து நீண்ட காலம் செய்து வந்த செலவாணி மோசடி தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையினர் நடாத்தும் தமிழ் நூற் கண்காட்சி மூலம் அம்பலமாக்கப்பட்டுள்ளது.

ஈழத்திலே தமிழகத்துச் சஞ்சிகைகள் நடைமுறையில் உள்ள "பீகஸ்" திட்டத்தின் காரணத்தால் குறிப்பிட்ட விலையிலும் குறைவாகவே விற்கப்பட வேண்டுமென எச். எம். பி. முஹைதீன் குறிப்பிட்டிருந்ததை பல மேடைகளிலும் தமது பிரச்சார இதழ்களிலும் பேசியும் எழுதியும் வரும் அதே கம்யூனிஸ்டு எழுத்தாளர்கள், தமது நூல்களை இந்தியாவில் அச்சிடுவதற்கு அந்நிய செலாவணியை எப்படிப் பெற்றார்கள்? கள்ளச் சந்தையில் இலங்கைப் பணம் அனுப்பப்பட்டதா?

இந்தியாவில் அச்சிடப்பட்ட தமது நூல்களை அவர்களே மீண்டும் இறக்குமதி செய்து தமது கட்சிக் கடைகளிலே விற்பனை செய்யும் போது பீக்ஸ் திட்டத்தின் பயனையும் அனுபவித்து இருமடங்கு மும்மடங்கு விலையைப் போட்டு விற்றும் வருகின்றனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் பதவிக்குப் போட்டியிட்டுத் தகுதியற்றவராக நிராகரிக்கப்பட்ட திரு. க. கைலாசபதி என்ற முற்போக்குக் கம்யூனிச எழுத்தாளர், தனது அடியும் முடியும் என்ற நூலை சென்னை பாரி நிலையத்திலே அச்சிட்டு வெளியிட்டுள்ளார்;

புத்தகத்தின் விலையோ 7 ரூபா என நூலில் குறிப்பிடப்பட்டிருபபினும் வெள்ளவத்தையில் உள்ள புத்தகக் கடை ஒன்றில் 11 ரூபா 20 சதத்திற்கு விற்கபபடுவது நூற காட்சியின் மூலம் தெரியவந்துள்ளது.

தமிழகத்துச் சஞ்சிகைகள் 3 சதம 5 சதம் 10 சதம் அதிகமாக விற்கப்படுவதை எதிர்க்கும் இந்த முற்போக்குக் கம்யூனிஸ்டுக் கும்பல் தமது நூலகளை 4 ரூபா 20 சதம் அதிகமாக விற்கும் மோசடியை இவ்வாறு தமிழ் மக்களுக்குப் பகிரங்கமாக்கிய தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையினருக்குத் தமிழ் மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

திருவாளர் கைலாசபதி, கணேசலிங்கம், டொமினிக் ஜீவா, அ. முத்துலிங்கம், என். கே. ரகுநாதன், கமாலுத்தீன், சில்லையூர் செல்வராசன், சோ. நடராசன், இளங்கீரன், முருகையன் போன்றவர்களால் 25க்கு மேற்பட்ட நூல்கள் இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன.

தமிழகத்துச் சஞ்சிகைகளால் 3 சத வீதம் இலங்கைப் பணம் செலவாகிறதை யிட்டு ஆழ்ந்த கவலைப்படும் அமைச்சர் குமாரசூரியர், எம். பி. முஹைதீன் போன்றவர்கள் மேற்கூறிய கும்பல் இலக்கியத்தின் பெயரால் செய்துவரும் செலாவணி மோசடியை அம்பலமாக்குதற்குப் பகிரங்க விசாரணை கமிஷன் ஒன்றை அமைத்தற்குத் தயங்கும் மர்மத்தையும் தமிழ் மக்கள் அறிய ஆவலாயுள்ளனர்.

### முத்தையன் கட்டு தபால் நிலையம் திறக்கப்படாதது ஏன்?

தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுத்தரத்தான் கையாலாகாதவராக இருக்கிறாரென்றால், தமிழ்ப் பகுதியின் தபால் தேவைகளையாவது நிறைவேற்றித் தர முடியாதவராக ஆகிவிட்டாரா? இவ்வாறு வவுனியாத் தொகுதியிலுள்ள முத்தையன்கட்டு வாழ் விவசாயிகள் ஆத்திரத்துடன் கேட்கிறார்கள்;

கடந்த தேசிய அரசாங்கம் தமிழ்மக்களின் கோரிக்கையை ஏற்று வவுனியா பகுதியிலே உள்ள முத்தையன் கட்டு விவசாயிகள் திட்டத்தில் 1969-ம் ஆண்டு சுமார 15,000 ரூபா செலவில் ஒரு உப தபால நிலையத்தை நிறுவியது. ஆனால் 1970 தேர்தலில் பதவிககு வந்த "சோசலிச அரசு" திடீர் என்று அதை கைவிட்டு விட்டது; இத் தபால் நிலையம் திறந்து வைக்கப் படவேண்டும் என்று இவ்வூர் விவசாயிகள் நீண்ட மகஜர் மூலம் தபால் அமைச்சரையும் தபால் அமைச்சு நிர்வாகத்தினரையும் பல காலமாக கேட்டிருந்தும் அது பற்றி தபால் அமைச்சர் எது வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

முத்தையன் கட்டுக் குளம் போஸ்ட் மாஸ்டர் என்று தனிச் சிங்களத்தில் முகவரியிட்டு தபால் திணைக்களம் அங்கு கடிதங்களை அடிக்கடி அனுப்பி வருகின்றது. ஆனால் அங்கு போஸ்ட் மாஸ்டரும் நியமிககப்படவில்லை தபால் நிலையமும் திறக்கப்படவில்லை. பார்த்தீர்களா தமிழ் தபால் அமைச்சர் அவர்களின் கீழ் இயங்கும் திணைக்களத்தினரின் நிர்வாகச் சீர்கேட்டை என்று மக்கள் வியக்கின்றனர்.

முன்னாள் தேசிய அரசு தபால் அமைச்சினால் இவ் உப தபால் நிலையததுக்கென அனுப்பப்பட்ட காரியாலய தளபாடங்கள் உப தபால் நிலையத்தில் வந்து இரண்டு வருடங்களாகி விட்டன. இவைகளையெல்லாம் மகஜர் மூலம் எடுத்துக் காட்டியும் இதுவரை நடவடிக்கை எடுக்காது இருக்கும் தபால் அமைச்சின் நிர்வாகச் சீர்கேட்டை அமைச்சர் அறிவாரா? வவுனியாத் தொகுதியின் முத்தையன் கட்டு உப தபால் நிலையத்தை உடன் திறந்து வைக்கும்படி உடன் உத்தரவிடுங்கள், மக்களின் கஷ்டத்தை போக்குங்கள் என்று முத்தையன் கட்டு விவசாயிகள் தபால் அமைச்சரை வேண்டுகின்றனர்.

(ஒட்டுசுட்டான் நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினசாராவுக்கு நினைவுச் சின்னம்

## நிறுவியது நியாயமானதாம்!

## தமிழ் மக்களுக்காகத் தமது முடிவுகளை மாற்றுவதற்குத் தயாராக இல்லையாம்!

## திருமலை வாலிபர்களின் கேள்விகளுக்கு தமிழ் கம்யூனிஸ்டுகளின் மழுப்பல் பதில்!

8-2-71 திங்கட்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு திருக்கோணமலை திருவள்ளுவர் கழகத்தில் ஆரம்பமாகிய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை விளக்கக் கூட்டத்தில் பிரதம விருந்தினர்களாக யாழ்நகர் இருந்து முன்னுள் திருமலை இந்துக் கல்லூரி அதிபர் க. சிவபாலன், ஏ. வைத்திலிங்கம், வி. பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டம் ஆரம்பமாகியதும் யாராவது கேள்விகள் கேட்டால் இங்கு பதில் கொடுக்கப்படுமென தலைவர் கூறவும் அக்கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த தமிழரசு வாதிகள் பலர் ஒன்றன் பின் ஒன்றாகக் கேள்விக் கணைகள் தொடுத்தனர். கேள்விகள் கேட்கப்பட்டதோ அடக்கத்துடன். ஆனால் அங்கு விடைகளோ பதட்டத்துடன் இறுக்கப்பட்டது. திரு. வி. பொன்னம்பலம் விடை கூறிக் கொண்டிருக்கும் வேளையில் ஏ. வைத்திலிங்கமும் இடையிடையே விரிவான விளக்கமும் கொடுத்தார், ஆனால் முழு விடைகளும் மழுப்பலாகவே இருந்தன.

கே: இலங்கை குடியரசாக்கப்பட்ட பின்னர் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எவ்வித பாதுகாப்புகள் புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் (உரிமைகள்) இடம் பெறும்...

வி. பொ. தற்பொழுதுள்ள உரிமைகளனைத்தும் புதிய அரசியலமைப்புச்சட்டத்தில் இருக்கும் என்பது எங்கள் நம்பிக்கை. இல்லாது போய் விடும் என நினைப்பது உங்கள் தவறு.

கே: பிரிவி கவுன்சில் இல்லாது போகும் வேளையில் இங்குள்ள நீதிபரிபாலனம் அனைத்தும் ஒரு சிலரின் கட்டுப்பாட்டுக்குள் வரலாம். அந்நிலையில் இங்கு பாரபட்சமான நீதிகள் வழங்கப்படும் போது பெரும்பாலும் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார்களே!

வி. பொ. ஒரு சிலரின் கட்டுப்பாட்டுக்குள் நீதிபரிபாலனம் வந்து விடும் என்று நீங்கள் சிந்திக்கின்ற வேளையில் நாம் இராணியாரின் கீழிலிருந்து விடுபடுகின்றோமே என்பது பற்றிச் சிந்திக்கிறீர்கள் இல்லை. பிரிவிக்கவுன்சில் இருப்பது நமக்கு ஓர் அடிமைச் சின்னம் போன்றது. ஆகவே நாம் இதையிட்டுக் கவலை கொள்ள வேண்டியதில்லை.

கே: குடியரசாக்கப்பட்ட பின்னர் "கோடீஸ்வரன் மொழி வழக்கு" போன்ற வேறு சில வழக்குகள் தமிழ் மக்களுக்கு ஏற்படும் சூழ்நிலையில் நியாயமான தீர்ப்பைத் தமிழ் மக்கள் எங்ஙனம் அரசினரிடம் இருந்து எதிர் பார்ப்பது...

வி. பொ. இப்படியான சந்தர்ப்பத்தில் நாங்களும் அவர்களைப்போல் மனிதர்கள் தான் என்பதை அவர்கள் சிந்தித்து மனச் சாட்சியின்படி தீர்ப்பு வழங்குவார்கள். இதையிட்டு நாம் பயப்பட வேண்டியதில்லை.

கே: மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்றவுடன் "தமிழுக்கு எதிராக போர்க்குரல் எழுப்பி—ஈழத்தின் அரசியல் தமிழுக்கு நியாயமான அளவு இடந் தருவதைக் கூட எதிர்த்து கிளர்ச்சி நடத்திய சிங்கள இன வெறியன் 'இரத்தின சாரா' என்ற பௌந்தபிக்குவுக்கு ஜனவரி 8ம் நாள் கொழும்பில் நிரந்தர நினைவுச் சின்னம் எழுப்பி இத்தகைய செயலில் ஈடுபட்ட இரத்தின சாராவை பின்பற்றி எதிர்கால இளஞ் சந்ததியினராகிய இந்நாட்டு இளைஞர்கள் அனைவரும் உங்கள் மொழிக்காக எந்தகைய உயிர்த் தியாகத்தினையும் செய்வதற்குத் தயங்கக் கூடாது.' என்றெல்லாம் போற்றிப் புகழுகின்றார்கள் அம்மா ஆட்சியாளர்கள் அதற்கு தங்களைப் போன்றவர்களும் ஒத்து நின்று துதி பாடுவது பற்றி தங்கள் விளக்கம் என்ன?

வி. பொ: இரத்தினசாராவிற்கு நாம் நன்றிக் காணிக்கையாகவே அதை செய்திருக்கின்றோம். அதையிட்டு தமிழ் மக்கள் ஏன் பிழையாகக்கருத வேண்டும். இரத்தினசாரா போன்றவர்களால்த்தான் நாம் இன்று ஆட்சியில இருக்கமுடிந்தது. ஐ. தே. கட்சியினரை ஆட்சி பீடத்திலிருந்து இறக்கிய பெருமை அவருக்கே உரியது. அவர் தமிழ் மொழியை எதிர்த்துப் போராட்டஞ் செய்யவில்லை தமிழ் மொழிச் சட்டவிதியை எதிர்த்து போர்க்குரல் எழுப்பவில்லை என்பது எனது கருத்து.

ஈற்றில் கொள்கை விளக்கம் வெறும் மழுப்பலாக அமைந்தமையால் யாரும் ஏற்றுக் கொள்ளத்தக்க முறையிலிருக்கவில்லை. இறுதியில் ஆசிரியர் ஒருவர் கேட்ட கேள்வி:-

'ஐயா, தங்கள் அரசியல் கொள்கை விளக்கத்தை விட்டு, திருமலைக்கு பல்கலைக் கழகம் கிடைக்குமா? அதற்கு தாங்கள் பாடுபடுவீர்களா?

வி. பொ: யாழ்ப்பாணத்தில் தேசிய பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட பின்னர் திருமலைக்கு கிடைக்க பாடுபடுவோம்.

கே: இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு உடன் விமோசனம் அளிக்கத்தக்க கொள்கைகள் தங்களிடம் இருந்தால் கூறுங்கள்:-

வி. பொ. உடனடியாக விமோசனம் பெறமுடியாது. ஆறுதலாகவே பெறலாம். இதுவே எமது இறுதியான திர்க்கமான முடிவாகும்.

இறுதியில் வி. பொன்னம்பலமும், ஏ. வைத்திலிங்கமும் கூறியதாவது:-

நம்மிருவரது கருத்தும் ஒன்றே. உங்களுக்கு எமது கொள்கைகள் (கம்யூனிஸ்ட்) வேப்பங்காய் கசப்பது போல் கசக்கிறது போலும்! தயவு செய்து எங்கள் கொள்கைகளை நீங்கள் ஏற்றுக் கொள்வதானால் ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் உங்கள் விருப்பத்திற் கேற்றவாறு (தமிழ மக்களுக்கு) எங்கள் முடிவுகளை ஒரு போதும்மாற்றமாட்டோம்'

இவ்வேளையில் வி. பொன்னம்பலம் அவர்கள் சபையோரைப்பார்த்து 'எனக்கு ஏன் இந்த வீண் வேலை. ஏதோ தமிழ் மக்கள் விமோசனம் பெறவேண்டும் என்பதற்காகத்தான் இததொண்டினை செய்து வருகின்றேன் ஏன் நாமும் தமிழர்தான் எங்களுக்கும் தெரியும எமது இன்னல்கள். ஆனால் போராடிப்பெற முடியாது. எதுவானாலும் ஆட்சியாளருடன் ஒத்துப் போனால்தான் பெற்று விமோசனம் பெற முடியும்' இதுவே எங்களினது இறுதியான முடிவாகும். எனக்கு இந்துக் கல்லூரியில் வேறு நிகழ்ச்சியிருப்பதனால் இத்துடன் விடைபெறுகின்றேன் வணக்கம்.

குறிப்பு: இந்துக் கல்லூரி நிகழ்ச்சியில் பங்கு பற்ற வந்த வி. பொன்னம்பலம் எனக்கு இந்நிகழ்ச்சி பற்றி இப்பதான் தெரியும் என பெரியடுப்பொன்றை விட்டு விட்டு ஏற்கெனவே இருந்த தலைப்பை தனக்காக மாற்றிக் கொண்டு ஆரம்பத்திலேயே 'மனிதாபிமானம்' பற்றி பேசி முடித்து விட்டு சென்று விட்டார்.

---

# குருக்கள் மடம் தொடங்கி பழுகாமம்வரை மக்கள்தலைவர் சி. மு. ராசமாணிக்கத்துக்கு மகத்தான வரவேற்பு

## கடந்த எட்டுமாதங்களின்பின் பொதுப்பொலிவுடன் விளங்கியது பட்டிருப்பு தொகுதி!

(களுவாஞ்சிகுடி நிருபர் 'சன்')

"பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் தனது பதவியை இழந்தார்" என்ற செய்தியைக் கேட்டபட்டிருப்புதொகுதி தமிழ் பேசும்மக்கள் அடைந்த மகிழ்ச்சியை நான் நேரடியாக கண்ட போது அதை சொல்லில் வடிக்க முடியாமல்திண்டாடினேன் பட்டிருப்பு தொகுதியின் ஆரம்பமாகிய குருக்கள் மடம் தொடக்கம், கல்லாறு, முடிய உள்ள ஒவ்வொருகிராமமும் கலியாண வீடுகள் போல் கடந்த 5-ம் திகதி பி. ப. 4 மணி தொடக்கம் காட்சியளித்தன'

வீதிகள் எங்கும் மூவர்ணக் கொடிகள் பறந்தவண்ணம் இருந்தன. 5-ம் திகதி 3 மணியளவில் வெடிக்க தொடங்கிய பட்டாசுகள் 6-ம் திகதி 6 மணிவரையும் வெடித்த வண்ணம் இருந்தன.

குருக்கள்மடம் மக்கள் வீதியில் பூரணகும்பங்கள்வைத்து கொழும்பிருந்து விமான மூலம் வந்த எங்கள் தலைவர் சி. மு. இராசமாணிக்கம் அவர்களையும், கடமையே பெரிது, கண்ணியம், கட்டுப்பாடு என் இருகண்கள். மொழி எனது உயிர் என்று கூறி மேற்படி ஆட்சேபனை மனுவை தாக்கல் செய்த பழுகாமத்தை சேர்ந்த மூத்துப்பிள்ளை அவர்களை மூவர்ணமலர்மாலை அணிந்து வீரத்தமிழன், என்ற பட்டம் சூட்டி ஊர்வலமாய் அழைத்துவந்தனர்.

செட்டிபாளையத்திலும் அதை தொடர்ந்து களுவாஞ்சிகுடியிலும் ஒரு மாபெரும் வரவேற்பு நிகழ்ந்தது களுவாஞ்சிகுடி வரவேற்பில் பல்லாயிரக்கணக்கான மக்கள், தொகுதியின் பலபாகங்களில் இருந்தும் கலந்து கொண்டனர். களுவாஞ்சிகுடி மகாவிஷ்ணு ஆலயமுன்றலை ஊர்வலம் வந்தடைந்ததும் கடந்த எட்டுமாதங்களை குறிக்கும் முகமாய் எட்டு யார் நீளமான பட்டாசுக்கட்டு ஒன்று வெடிக்கப்பட்டது.

கடந்த எட்டு மாதங்களாய்பொலிவின்றி தூங்கிக் கிடந்தபட்டிருப்பு தொகுதி காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர் கூட்டத்தின்கடைசித் தலைவனும் அரியாசனம் ஏறியதை தாங்காத இயற்கை நீதியுடன் மண்கவ்வ செய்த செய்தியைகேட்டதும் பட்டிருப்பு தொகுதி மாண்புமிகு மக்கள் வீறு கொண்டு நம் தலைவர் இராசமாணிக்கம் வாழ்க என கோசமிட்டனர்.

வீடுவந்து சேர்ந்த தலைவர் இராசமாணிக்கம் அவர்கள் சுதந்திரனுக்கு முதல் அளித்த பேட்டியின் சுருக்கம்:—

இன்று வழங்கிய தீர்ப்பு ஆண்டவனால் வழங்கப்பட்டது என்று தான் நான் கூற முடியும். பணத்தாலும் பயமுறுத்தலாலும் எதையும் சாதிக்க முடியாது என்பதை மக்களுக்கு பட்டிருப்பு தேர்தல் மனு மீதான தீர்ப்பே விடைபகரும். மக்கள் இப்போது விழிப்புணர்ச்சியுடன் காணப்படுகின்றார்கள். விரைவில் அவர்கள் ஒருநல்ல முடிவிற்கு வருவார்கள் என எதிர் பார்க்கிறேன். ஆண்டவன் தான் எதற்கும் துணை 'என்று என்னிடம் கூறினார். இதற்கிடையில் தலைவர் அவர்கள் சுகவீனமாய் காணப்படுவதால் சிறிது ஓய்வு அவருக்கு தேவை என வைத்தியர்கள் கூறியிருப்பதாயும் தெரிகிறது. தேர்தல் மனு வென்றதை தொடர்ந்து தீவின் பலபாகங்களில் இருந்தும் வாழ்த்து செய்திகள் வந்த வண்ணமே இருக்கின்றன.

---

# தபால் தந்தி அமைச்சர் குமாரசூரியரே இதுதானா உமது சோசலிசம்?

ஐயா, உமது சோசலிசத்தை கண்டும்கேட்டும் கைதடிக் கிராமமேகுமுறுகிறது. என்ன ஐயா உமது செப்படி வித்தை. இதுவரை காலமும் கைதடி நகரிலிருந்து தொடர்ந்து ஐந்து வருடங்களாக உபதபாலதிபராக இருந்தவரை நீக்கிவிட்டு உமது வால் பிடியிலுள்ளவருக்கு கொடுப்பது நியாயமா? நீதியா? படிப்பறிவற்ற பச்சோந்திக் கும்பல்! இவர்களையா நியமித்தீர்கள் ஐயா நூற்றுக் கணக்கில் கைதடி வாழ்மக்கள் உங்களுக்கு தந்தியில் அனுப்பினார்களே:—

'தற்போது இருக்கும் அதிபரை நியமிக்குக அன்றேல் சிறுபான்மைத் தமிழரை நியமிக்குக' உங்களுக்கு கூறிய அறிவுரையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயின. இந்நியமனத்தையிட்டுகைதடிக்கிராமமே எரிமலைபோல் குமுறுகிறது. கொந்தளிக்கிறது. உங்கள் அரசாங்கத்தின் சோசலிசம் இதுதானா? படிப்பறிவற்றவனை அரியாசனத்தில் ஏற்றுவது — நெஞ்சில் உரமிருந்தால் நேர்மைத்திறன் இருந்தால் இந்நியமனத்தை யொட்டி கைதடி கிராமத்திலுள்ள 8 000யிரம் மக்களுக்கிடையே வாக்கெடுப்புக்கு விடுவோமா?

எமது கிராமத்தில் ஆயிரக்கணக்கில் படித்த வாலிபர் இருக்கிறார்கள். இத்தபால் அதிபருக்கு ஆயிரத்துக்கு மேலாகவிண்ணப்பம்அனுப்புவார்கள் தற்போதுஇருக்கும் தபால் அதிபரோ நேர்மையாளர், நீதியான முறையில் கருமமாற்ற கூடியவர், தபாற்கந்தோரை இவ்வளவு தரத்துக்கு உயர்த்திவைத்தவர், அதனால் தான்பலர் விண்ணப்பம் அனுப்பாமல் விட்டார்கள்.

ஊர்மக்களின் உணர்ச்சியைத் தூக்கி எறிந்து விட்டு உங்கள் பாட்டில் தகுதியற்ற ஒருவரைத் தெரிவு செய்து வைத்திருக்கும் அமைச்சர் குமாரசூரியரே' மக்கள் உணர்வுகளைப் புறக்கணிப்பது தான் உங்கள் மக்கள் ஆட்சியா? இதுதான் உங்கள் சோசலிசமா?

—இளைஞர் முன்னேற்றக் கழகம் கைதடி

---

கொழும்பு ஆனந்தபவானில்
வட்டுக்கோட்டை பா. உ. நடத்திய
"தோசைப்போர்"
விபரம் அடுத்த வாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் கிறிஸ்தவ தமிழ் பெரியார்களுக்கு விழா எடுத்தது ஏன்?

## பெரியாரைப் போற்றவா? பிரிவினையை வளர்க்கவா?

(கொழும்பு நிருபர் க. அ. பிள்ளை)

பரத இளைஞர் முன்னணி 'பெருமையுடன்' கொண்டாடிய 'தமிழ் வளர்த்த கிறிஸ்துவப் பெரியார்கள் விழா' 25-1-71ல் கொழும்பில் நடந்து முடிவுற்றது.

தமிழ் மொழி 'உயர் தனிச் செம் மொழி'யாகச் சமணர், பௌத்தர், சைவர் வைணவர், கிறிஸ்துவர், இஸ்லாமியர் என்ற பல வேறுபட்ட மதப் பெரியாரெல்லாம் உழைத்துள்ளனர்.

தமிழுக்குப் பணி செய்ததின் மூலம் தமிழ்க் குலத்தை இத்தரணியிலே உயர்த்திக் காட்டிய பெரியாரெல்லாம் தமிழினத்தின் வணக்கத்துக்குரியவர்கள்; எம்மதத்தைச் சேர்ந்தோராயினும் தமிழ்ப் பேசும் மக்கள் 'தமிழின் தொண்டரை' ஏற்றவும் போற்றவும் கடமைப்பட்டுள்ளனர்; நன்றி நவிலாத் தமிழரை நயவஞ்சகரெனலாம்.

'ஒரு தமிழன் தமிழுக்கே உயிர்வாழ்கின்றான், உயிர் வாழ்வோன் தமிழுக்கே தனை ஈகின்றான்' என்று பாட்டிசைத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்ந்த காலமிது. இன்றும் வீரமா முனிவருக்கு சைவப் பெருமன்றம் விழாவெடுக்கக்காணேம்; கம்பர் பெருமையை கிறிஸ்துவ சங்கங்கள் எடுத்தோதக் காணேம். 'தமிழ் வளர்த்த சைவப் பெரியார்கள்' என்று சைவரும், 'தமிழ் வளர்த்த கிறிஸ்துவப் பெரியார்கள்' என்று கிறிஸ்தவர்களும் மதத்தால் பிரிந்து மாறுபட்டே விழாவெடுக்கின்றனர்.

'தமிழ் வளர்த்த பெரியார்களை' மதம் என்ற எல்லை கடந்து தமிழ்ப் பேசும் மக்கள் யாவருமே ஒன்றுபட்டுப் பணிந்து பரவும் காலம் வர இன்னும் எத்தனை நாள்?...

அந்த நாள் வரும் வரையில் இவ்வாறான விழாக்களை ஏற்றுக் கொள்வோம். என எண்ணி இருந்தோர் இதயத்தைத் தூளாக்கத்தக்க வகையில் பரத இளைஞர் முன்னணி எடுத்த விழா அமைந்திருந்தது ஏன்?...

யாழ்ப்பாணத் தமிழரை நம்பாதே என்று மட்டக்களப்புத் தமிழரை ஏமாற்றுவது போல்; வடக்கும் கிழக்கும் வஞ்சிக்கிறது என்று சொல்லி மலை நாட்டுத் தமிழரைப் பிரிப்பது போல்; உயர் சாதித் தமிழர் என்று கூறப்படுவோர் வேறு; நாம் வேறு என்று உரிமை குறைந்த தமிழர் கூறித் தனிச் சாதி பிரகடனம் விடச் செய்தது போல்; சைவத் தமிழ்ப் பெரியார்கள் ஒருசாதி, கிறிஸ்தவத் தமிழ்ப் பெரியார்கள் வேறொரு சாதி என்று தமிழ்ப் பேசும் மக்களை எண்ணச் செய்யத் திட்டமா?... பரத இளைஞர் முன்னணியினர் எடுத்த விழா 'காஞ்சோண்டி'யாய் இருந்ததற்கு வேறென்ன காரணம்?

தமிழ் மக்களுள் சைவரென்றும் கிறிஸ்துவர்களென்றும் இருக்கும் பிரிவினையைப் பெரிதாக்கிப் பேதத்தை வளர்த்துவிடலாமென்பதனுலா?... இதுவும் ஒரு சோசலிசச் சூழ்ச்சியா? 'தமிழ் வளர்த்த கிறிஸ்தவப் பெரியார்கள்' விழாவில் பேசிய பேச்சாளர்களின் உரையைக் கேட்டபோது இவைபோன்ற வினுக்களே தோன்றியது.

விழாவில் பேசிய திரு. அரியநாயகம் (திருமலை) பாரதிதாசன் கவிதைசொன்னுர். தேப்பானியிலிருகவினை நகளைவிளக்கினுர் 'இரட்சண்ய யாத்திரீகத்தில் ஒரு பாடல் காட்டினுர், முடிவுரையில் சைவத் தமிழரும், கிறிஸ்தவத் தமிழரும் ஏன் பிரிந்திருக்க வேண்டும் என்பதற்கான காரணத்தைச் சுருக்கமாக எடுத்துக் கூறினுர் சுவாமி ஞானப்பிரகாசருக்குத் தபால்தலை வெளியிடும் படி கோரிக்கை விட மறந்ததைச் சொல்லிக் காட்டியதன் மூலம்.

விழா நடத்தப் படுவதற்கான விளக்கத்தைத் தந்தவர் செல்வி ராஜம் புஸ்பவனம் என்ற பெண்மணிதான். அவர் பேசுகையில்:- "ஒரு தமிழன் மதத்தை இன்னொரு தமிழன் கேட்கும் போது 'நீ தமிழா—வேதமா' என்றே கேட்பார்; தமிழ் என்ருல் சைவத்தைக் குறிக்கும், வேதமென்ருல் கிறிஸ்துவத்தைக் குறிக்கும் கிறிஸ்தவர்களை தமிழர் என்று எண்ணச் செய்யாத இந்தப் பழக்கம் இன்னும் சில காலத்தில் கிறிஸ்தவர்கள் தனி இனமாக மாறிவிடக்கூடுமோ என்று கவலைப்படுகின்றேன்" என்ருர்.

இதுபோல் விழாவில் பேசிய யாவரும் சைவர்களையும் கிறிஸ்தவர்களையும் பிரித்துத் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து விடக்கூடியதான 'முயற்சியை'த் தவறின்றிச் செய்தது புரியக் கூடியதாயிருந்தது.

விழாவில் நாடகம் 'அலைகள்' என்ற தலைப்பில் சில நிமிடங்கள் நடைபெற்றது; உரையாடல் யாழ்ப்பாணத் தமிழாக இருந்தது. ஆனுல் கதாபாத்திரங்களின் உடையோ.........?

தமிழ் மீனவர்களாக நடித்தவர்கள் 'ஐந்து லாம்படிச் சினுக்களாக' உடை அணியச் செய்திருந்த குற்றத்தை மன்னித்து விடுவோம். மீனவனின் மனைவியாக 'ஒருத்தி' நாடகத்தில் வந்து போனுளே அவளை தமிழச்சியாக ஆடை அணிவித்துக்காட்ட மறுத்த குற்றத்தை.........? ஒற்றை ஆட்சி, ஒரே மொழி கொண்ட நாட்டில் உடையும் ஒரே விதமாக இருக்க வேண்டும் என்பது நாடக அமைப்பாளர்களின் எண்ணமோ?

(11-ம் பக்கம் பார்க்க)

---

## அத்தியாயம் (5)

# தத்தை விடு தூது

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றுகூறிப் போந்துள்ளார்கள் எம்பெரியோர்; ஆயின் அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக அவர்கள் செய்வது சுத்தத் தவறு என்று தெரிந்த பின்பும் அதற்குச் செவி சாய்ப்பது சுத்த முட்டாள் தனமாகும். பெற்ருேரும் தம் குழந்தைகளின் நலன் கருதி அவர்களுக்காகச் சிறிது விட்டுக் கொடுத்து நடப்பார்களானுல் பிள்ளைகளும் அவர்கள் வாக்கைத் தேவ வாக்காகக் கொள்ளலாம். அதைவிட்டு ஒரு அப்பாவிப் பெண்ணின் மூன் யாரோ ஒரு புதிய நபரைக் கொண்டு வந்து கட்டாயத்திற்காக மாலைபோடு என்று கூறுவது எவ்வாறு பொருந்தும். இது எவ்வளவு பாதகமான செயல், சிறுவயது முதற் கொண்டு ஒன்ருகப் பேசிப்பழகி ஆடிப்பாடிக் கூடித்திரிந்தவர்களைப் பிரிப்பது எவ்வளவு கொடுமை நிறைந்த செயல், இவ்வளவு வயதும் அனுபவமும் முதிர்ந்தும் கூட இவர்கள் மனம் ஏன் இப்படிப் பேதலித்துப் போகிறது. பெற்ற பிள்ளைகள் வடிக்கும் கண்ணீரில் இன்பங்காண்பதுதான் பெற்ருேர் செயலா? இறைவா சிவகாமியின் உள்ளத்திற்கு நிம்மதியைக் கொடுக்க அவள் அப்பாவைக் கருணையுள்ளவராக்கி விடு அவர் மனம் மாறட்டும் எமது வாழ்வு மலரட்டும் சரவணன் சிந்தித்துக் கொண்டேயிருக்கிருன்.

மல்லிகைப் பந்தலின் கீழ் அமர்ந்தபடி பைத்தியம்பிடித்தவன் நிலையில் கேசங்கலைந்து கிடக்க உணவும் உறக்கமும் இன்றி உடல் வாடி வதங்கியிருக்க கீழே கிடந்த மல்லிகைப் பூக்களைப் பொறுக்கி மாலை தொடுத்து அதை மடியில் வைத்துக்கலங்கிய கண்களுடன் பார்த்துக் கொண்டேயிருக்கிருன் அவன்.

அப்படியான மாலைகள் செய்து சிவகாமிக்கு அணிவித்த நாட்கள் அவன் மனதுக்கு வருகின்றன. அவன் அவள் தலையில் அணிவிக்கும் மாலை அடுத்தநாள் விடியும் வரை அவள் கூந்தலை அழகு செய்யும் தலைசீவும் போது வலோற்காரமாக அவன் தாய் அதை எடுத்து எறிந்தாற்தான் உண்டு. நாளாந்தம் சரவணன் புத்தம் புதிய மலரெடுத்து அவளுக்கு அணிவித்து விடுவான். அதில் அவர்கள் இருவருக்குமே ஒரு மகிழ்ச்சி. அந்த மாலை இன்று அவன் மடியில் மலர்ச்சியற்று மணமற்றுத் தேடுவாரற்றுக் கிடந்தது. அதை மிருதுவாக வாத்ஸல்யத்துடன் தடவி விட்டுக் கொள்கிருன் அவன். அதில் ஒரு மகிழ்ச்சி கலந்த நிம்மதி அவனுக்கு ஆயினும் அவனையறியாமலே அவன் கண்கள் பனிக்கின்றன; உள்ளத்தில் விம்மி வெடிக்கும் வேதனையைக் கட்டுப்படுத்த முடியாதவனுய் மாலையைக் கையில் எடுத்துக் கொண்டு அழுகிருன் அவன் திடீர் என ஒரு சிந்தனை அப்படியே அந்த மாலையை ஒரு மரக்கொம்பரில் அணிவித்துவிட்டு தலையைப் பிடித்துக் கொண்டு எங்கோ செல்கிருன் அவன் நிலையைப்பார்த்த கனகசுந்தரம் அவனைப் பின் தொடர்கிருன்! தம்பி...இப்படியே நீ கவலைப்பட்டு அழுதுகொண்டிருந்தால் உன் நிலை என்னுவது...? நடந்ததை மறந்து மனதைத் தேற்றிக் கொள் என்கிருன்.

எப்படியண்ணு என் மனம் ஆற முடியும் சிவகாமி கூடவா என்னை மறந்துவிட்டாள்? தாம் பெற்றெடுத்த குழந்தையின் நன்மையிது திமையிது என்பதை உணராத பெற்ருேரின்வார்த்தைகளை அவளால் மீற முடியாதா என்ன? தாய் தந்தையரிக்கும் ஒரளவுக்குக் கீழ்ப்படியத்தான் வேண்டும். ஆனுல் அதுவே தன் வாழ்க்கைக்குக் கூற்றுவனுக அமையும் என உணர்ந்து கொண்டும் கண்மூடித்தனமாக நடக்கக் கூடாது. அதற்காக அவளை யாருங் குற்றஞ் சொல்ல முடியாது. இதையெல்லாம் நான் அவளுக்கு எப்படித் தெரியப்படுத்துவது...? தன் மனத்தாக்கத்தைத் கனகசுந்தரத்திடம் கூறியதில் ஒரு நிம்மதி உண்டாக அவன் மனதில் ஒரு கவிதை பிறக்கிறது.

### திருமதி. பாலேஸ்வரி

நல்லரெட்டினசிங்கம்

தந்தை மொழி தலைவகித்துத்
தாய்சொல் மொழியுளம்
பேணி
நந்தமக்குத் திங்கிழைத்த
னலமோ பசுங்கிளியே
மைந்தர் துயர் நோக்கார்
மனமெழுந்தவாறுரைக்கில்
அந்தோ மறுத்த
லவசியமாம் பைங்கிளியே
ஆருங் குறை சொல்லா
ரறிவாய் பசுங்கிளியே

தான் பாடுகின்ற அரிய கருத்துக்கள் நிறைந்த கவிதைகளை சிவகாமியிடம் யார் எடுத்துக் கூறுவது...? இந்தப் பைங்கிளி சென்று கூறுமா? அதற்கு அவ்வளவு [illegible] [illegible] [illegible] சிந்திக்க அவன் தயாராக இல்லை அவன் நோக்க மெல்லாம் தன் உள்ளத்துஉணர்ச்சிகளையும் தன் துன்பத்தையும் வெளிப்படுத்தும் வாய்க்காலாகக் கவிதைகளை அமைத்தலே. அதில் அவனுக்கு ஒரு திருப்தி ஒரு நிம்மதியுங்கூட.

சரவணனுக்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறது. உள்ளேயிருக்கப் பைத்தியம் பிடித்துவிடுமோ என்றமனக் கிலேசம் ஏற்பட அவன் மெதுவாகத் தெருவாயிலுக்குப் போகிருன் வாயிலில் தன்னை மறந்து நிற்கும் போது ஏதோ அவன் காலில் தட்டுப் படுகிறது. அது என்னவாக இருக்கும் என அவன் குனிந்து எடுத்துப் பார்த்தான். அதில் அழகிய பெண் ஒருத்தியின் படம் ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தது. அந்த ஓவியத்தையே கண் மூடாமற் பார்த்துக் கொண்டிருந்த அவனது கண்களில் சிவகாமி தோற்றமளிக்கிருள்.

செந்தாமரையை விட அழகிய கண்கள் அவளுக்கு. அந்தக் கருவிழிகளில் எப்போதும் ஒளி நிறைந்திருக்கும்; குங்குமம் போன்ற சிவந்த மேனி. திருக்கோணமலையில் அப்போது வாழ்ந்த பெண்களில் அழகி என்றே கூறலாம். அந்த அழகு தான் தன்னையும் அடிமைப் படுத்தியது என்று நினைக்க அவனுக்கு அப்படத்தின் மீதே ஆத்திரம் வந்தது. அதனுல் காற்ருேடு காற்ருகப் பறக்கும்படி அதைக் கைநழுவ விட்டான். அதன் பின் தெருவில் நிற்கக் கூட விரும்பாதவனுய் உள்ளே போகத் திரும்பிய போது எதிர் வீட்டுப் பொன்னையா அவனைக் கை அசைத்து நிறுத்தித் தெருவைக் கடந்து வந்து கொண்டிருந்தார்.

'தம்பி நான் எல்லாங் கேள்விப்பட்டேன் அப்பா. அந்த இராஜவரோதயம் இவ்வளவு கொடுமை செய்வார் என நான் எதிர்பார்க்கவே இல்லை. உம்! இனி என்ன செய்வது. பேசாமல் மனதைத்தேற்றிக்கொள் அப்பா! பொன்னையா அவனைத் தேற்ற முயன்ருர். சிறு பராயத்தில் இருந்தே பொன்னையாவுக்கு அவன் மீது அப்படி ஒரு பாசம். அவனைத் தன் மார்பிலுந் தோளிலும் சுமந்து வளர்த்து ஆளாக்கியவர் அவர். அவன் என்னுடைய மகன் என்று பிள்ளையில்லாத அவர் அடிக்கடி கூறித் தன் மனதைத் தேற்றிக் கொள்வார். அவனுக்குத் திருமணம் நடக்கும் போது சிவகாமியை நான் தான் தத்தம் பண்ணி வேண்டிக் கொள்வேன் என்று பெருமையுடனும் உரிமையுடனுங் கூறிக் கொள்வார். அப்படிப்பட்ட அன்புள்ளம் படைத்த ஒருவர் கேட்கும் போது அவன் மௌனமாக இருக்க முடியுமா? அதனுல் ஆமாம் மாமா! ஏதோ விதிப்படி நடந்து விட்டது. மனதைச் சமாதானப் படுத்திக் கொள்ளத்தானே வேண்டும் மாமா! அல்லது வேறு வழி! என்று அவன் பதில் கூறிய போது அவன் குரல் சாடையாகக் கம்மிக் கொண்டது.

உனக்காக நான் ரொம்பவும் பரிதாபப் படுகிறேன் தம்பி. இப்படி நடக்கும் என்று யார் எதிர்பார்த்தார்கள்? சிவகாமிக்கு இப்படி ஒரு விதியா வரவேண்டும்? அவளது அழகுக்கும் குணத்துக்கும் இப்படி ஒரு கணவன் தானு வாய்க்க வேண்டும்? என்று அவர் கூறிய போது சரவணன் மிகவும் ஆவலுடன் அவரைப் பார்த்தான்; சிவகாமியின் கணவரைப் பற்றி அவர் தொடர்ந்து என்ன கூறப் போகிருர் என அவன் உள்ளம் ஏங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழனுக்குத் தந்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கின்றன!

## சம்பள உயர்வு, கட்டாய 6 நாள்வேலை 17-50 பஞ்சப்படி என்னுச்சு?

## அரசுக்கு ஆலவட்டம் வீசுகிறார் அசீஸ்! விரக்தியின் விளிம்பில் மலையகத்தமிழர்!!

ஒரு நாட்டின் பொருளாதாரம் அந் நாட்டின் முதுகெலும்பென மதிக்கப்படும் தொழிலாள வர்க்கத்திலேயே தங்கியிருக்கின்றதென்பது கண்கூடு. இந்தக் கருத்தின்படி இலங்கையின் பொருளாதார அமைப்பை நோக்குவோமாயின் ஒரு தெளிவான உண்மை புலனாகின்றது; அதாவது இலங்கையின் பொருளாதாரம் ஒரு தோட்டப் பயிர் பொருளாதாரமென்பதே அஃதாகும். இந்த தோட்டப் பொருளாதார அமைப்பின் செழுமைக்கு மூலகாரணமானவர்கள் மலையகத் தமிழர்களே! இந்தத் தமிழர்கள் இலங்கையின் பொருளாதாரத்தையே ஆக்கவும் அழிக்கவும் சக்தி படைத்திருக்கிறார்கள். ஆனால் அப்படியான சக்தியைப் படைத்தும் மலையகத் தமிழர்கள் இன்று வெறும் கூலிப்பட்டாளமாக இருப்பது எதனால்? இந்த நிலையினைச் சிறிது யோசிப்போமாயின் சில உண்மைகள் புலனாகும். இந்த உண்மைகளைக் கூறுவதற்கு முன்பு ஒரு சில கருத்துக்களையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நியாயங்களைச் சுட்டிக் காட்டும்போது அது சிலரைத் தாக்குவதாக இருக்கலாம். அந்த ஒரு சிலரின் மதிப்பை எண்ணி — அவர்களுக்காக எமது நியாயங்களை நாம் சுட்டிக் காட்டித் தட்டிக்கேளாமல் இருக்கலாமா? இதே நியாயக் கோட்டில் நின்று அநியாயங்களைத் தட்டிக்கேட்ட எமது வீரக் குரல் கோவை மகேசன் அவர்களை ஆட்சியாளர் கைது செய்யவில்லையா? அதற்காக திரு. கோவை மகேசன் தனது நியாயங்களை விட்டு விட்டாரா என்ன? அவர் சுட்டிக் காட்டிக் கேட்ட நியாயங்கள் தமிழர்களின் உயிர்த் துடிப்புகள். ஆனால் நான் சுட்டிக் காட்டவிழையும் நியாயங்கள் மலையகத் தமிழர்களின் அடிப்படைத் தேவைகளாகும். இதற்காக யான் என்னைத் திரு. கோவை மகேசன் அவர்களோடு ஒப்பிடுவதாக எண்ண வேண்டாம். அவர் ஒரு இடி முழக்கம்—நான் அந்த இடி முழக்கத்தால் உயிர்த்தெழும் ஓர் அணு.

### பிரஜாவுரிமை இல்லை

இலங்கை சுதந்திரமடைந்து ஏறக்குறைய இருபத்திமூன்றாண்டுகள் ஆகிவிட்டன. இந்த இடைக் காலத்தில் மலையகத் தமிழர் குறித்து எடுக்கப்பட்ட ஒரே ஒரு நடவடிக்கை அவர்களைக் கப்பலேற்றுவது தான். இந்திய ஒப்பந்தமென்ற பெயரால் ஐந்துலட்சத்து இருபத்தையாயிரம் பேரை இந்தியாவும் மூன்றேகால் லட்சம்பேரை இலங்கையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதன்படி 1964ம் ஆண்டு முதல் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்த சரத்துப்படி இந்த தொகைக்குச் சமமாக இந்தியத் தமிழர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவில்லை. மேலும் ஒப்பந்தத்திற்கு எதிராக அடிப்படைச் சரத்துகளில் தற்போது அரசாங்கம் மாற்றஞ்செய்கிறது. இதைத் தட்டிக் கேட்க வேண்டிய மலையக நியமன எம்.பி. திரு. அஸீஸ் அவர்கள் அரசாங்கத்தின் செயலுக்குத் தாளம் போடுகிறார்.

### வாக்குறுதி என்னுச்சு!

ஐக்கிய முன்னணி அரசாங்கம் தேர்தல் நடப்பதற்கு முன்பு பல கோரிக்கைகளை மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப் போவதாகக் கூறியது. இதே அரசாங்கத்தை ஆதரித்து திரு. அஸீஸ் மலையகத் தமிழர்கள் ஐக்கிய முன்னணி அரசையே ஆதரிக்கவேண்டுமென அறிக்கையும் பிரசாரமும் செய்தார். மலையகத் தொகுதிகளில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி ஆட்சிக்குவந்த ஐக்கிய முன்னணி, தேர்தல் காலத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்குத்

'சுகி'— பதுளை

குழிதோண்டிப் புதைத்து விடலாமென்பதே திரு. அஸீசினதும் அவரது எஜமானர்களினதும் எண்ணங்களாம்.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் பதினேழு ஐம்பது பஞ்சப்படிப் போராட்டம் நடத்திய திரு. அஸீஸ் அவர்களை அப்போதைய நியமன உறுப்பினரான திருவாளர் தொண்டமான் அவர்கள் ஒரு ரூபா சம்பள உயர்வு பெற்றுத்தருவாகக் கூறிக் காட்டிக் கொடுத்தார்,

### தொண்டமான் செய்ததை அசீஸ் இன்று செய்கிறார்

திரு. தொண்டமான் கடைசிவரை தனது ஒரு ரூபாய் சம்பள உயர்வு வாக்கைக் காப்பாற்றவில்லை. முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் திரு. அஸீஸ் அவர்கள் சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கு தேவை! தேவை என்று கத்தினார். தற்போது வாய் மூடி மௌனியாகவிருக்கிறார். அப்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகித்த திரு. தொண்டமான் அஸீஸ் எடுத்த முயற்சிகளுக்கு காலைவாரிவிட்டார். தற்போது தொண்டமான் செய்

## மலையகத்திலே........

தருவதாகக் கூறிய உரிமைகளில் ஒன்றைத் தானும் செய்யவில்லை.

அவற்றைப் பெற்றுத்தருவதாகக் கூறி நியமன உறுப்பினரான திரு. அஸீஸ் அரசாங்கத்தின் கைப்பாவையாக ஆடி வருகிறார். ஐக்கிய முன்னணி என்ற இந்த பூலோகப் புது 'சோசலிச' அரசாங்கம் பதவிக்குவந்த பின்பு என்னென்ன நன்மைகள் மலையகத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளன வென்பதைச் சிறிது பார்ப்போம்.

### பஞ்சப்படி எங்கே?

சம்பள உயர்வு தருவதாகக் கூறிய அரசாங்கமும்—அஸீசும் இதுவரை (எட்டு மாதங்களுக்குள்) ஒரு சதமேனும் சம்பள உயர்வுதரவில்லை; தோட்டங்களில் 6 நாள் வேலை கட்டாயச் சட்டமாக்கப்படும் என்று அறிவித்துவிட்டு இதுவரை அப்படியான சட்டங்கள் எதையும் ஆக்கவில்லை. 17/50 பஞ்சப்படி பெற்றுத்தருவதாகக்கூறிய அஸீஸ் தற்போது அரசாங்கத்திடம் பணமில்லையென்றதோடு அரசாங்கத்தின் நிதிநெருக்கடியைத் தவிர்க்க தோட்டத்தொழிலாளர்கள் ஆளுக்கு ஒரு ரூபா வீதம் உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சம்பள உயர்வு பெற்றுத்தருவதாகக் கூறியவர், சம்பள உயர்வுக்காக ஏங்கிக்கொண்டிருப்போரிடமே பிச்சை கேட்கிறார். இதன்மூலம் பஞ்சப்படி 17/50 பிரச்சினையையும் மற்றும் நாளாந்த [illegible] உயர்வுப் பிரச்சினையையும்

ததைத் திரு. அஸீஸ் செய்கிறார். அரசாங்கம் மாற அஸீசும் தொண்டமானும் மாறுகிறார்கள். ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் மாறுவதில்லை. அவர்கள் எந்த அரசாங்கம் வந்தாலும் இருக்கின்ற நிலையை விடக் கீழாகப் போகின்றார்களேயன்றி மேலேறுவதாகத் தெரியவில்லை.

### ஒப்பந்த விதிகள் மாற்றப்படுகின்றன

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று மேடைக்குமேடை வாய் கிழியக் கத்திய தற்போதைய சோசலிச அரசாங்கம் தான் கூறிய எந்த ஒரு செயலையாவது நடைமுறையாக்கியதா? இலங்கை-இந்தியா ஒப்பந்தப்படித் தாயகம் திரும்பும் தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதாகக் கூறிய தற்போதைய அரசு செய்வதென்ன? எந்தப் பிரதமர் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முயற்சியெடுத்தாரோ அதே பிரதமரே தான் செய்த ஒப்பந்த விதிகளை யதேச்சையாக மாற்றியமைக்கிறார். தொழிலாளர்களுக்குச் சோசலிச அரசு செய்யும் சேவை இதுதானா?

### கள்ளத்தோணிப் பட்டம்!

'தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டின் மீது உண் [illegible] அப்போதைய ஆட்சியாளர் அலறுகிறார்கள்.

## சேலை கட்டும் பெண்கள் செய்யும் வெட்கக்கேடு!

—பெ. ஏ. இராமநாதன்,—

தங்கத் தம்பிகளா! இங்கே வாருங்கடா!
உள்ளம் வேகுதடா! சிந்தித்துப் பாருங்கடா!
சேலை கட்டும் பெண்கள் செய்யும் வெட்கக் கேட்டை
தயவு செய்து கேளுங்கடா!

மகளைப் பெற்ற மாரியம்மா கொஞ்சம் நில்லம்மா
என்வார்த்தையிலே தவறிருந்தால் அடித்துக்கேளம்மா
ஆயி—அப்பன் ரெண்டுபேரும் செய்த தவறம்மா?
அடித்துக் கேட்க ஆளில்லாத மகளைப் பாரம்மா

உடம்பு தெரிய ரவிக்கை துணி வேண்டுமென்கிறாள்
உப்பு வாங்க காசு இல்லை பௌடர் கேட்கிறாள்
சாந்துப் பொட்டை கலரில் என்று வாங்கிக் குவிக்கிறாள்
வாழ்ந்து கெட்ட கிழவனையும் மயங்கச் செய்கிறாள்

அடக்க குணம் பெண்களுக்கு நிச்சயம் வேண்டும்
வாழ்க இந்த பெண் என்று ஊர் சொல்ல வேண்டும்
காலளந்த நடை பார்த்து காமுகர் கூட்டம்—உன்னை
கண் நிறைந்த தங்கையாக எண்ணிட வேண்டும்

கொத்து மஞ்சள் பூசியவள் கோவில் சிலையடா
குங்குமத்தை மதிப்பவளை வாழ்த்தி வணங்கடா
தெய்வம் இவள் வீட்டினிலே குடி இருக்குமடா'
தெருவினிலே இவள் நடந்தா பூ மணக்குமடா

## மலையக எழுத்தாளர் மன்ற கலைவிழாவில் நடந்ததென்ன?

### ஏ பி. வி. கோமஸ் தரும் விளக்கம்!

26-1-71 ல் வெளியான தங்களின் 'சுதந்திரன்' பத்திரிகையில்— 'மலையகத்திலே ......' என்ற பகுதியிலே வெளியாகியிருக்கும்—அட்டனில்—மலையக எழுத்தாளர் மன்றத்தில் நான் பேசிய பேச்சுப் பற்றிய 'விமர்சன' —நிருபர் 'கட்டுரையில்'— காணப்படும் சில விடயங்கள் பற்றி ஒரு விளக்கம் தர விரும்புகின்றேன்.

''அவர்கள் தமிழைவளர்ப்பதற்குப் பதிலாகக் கொலை செய்கிறார்கள்'' என்று தரப்பட்டுள்ளது. இதை நான் வன்மையாகஎதிர்க்கிறேன்: ஏனெனில், இப்படியான ஒரு சொற்பிரயோகம் என் வாயிலிருந்துவந்ததேயில்லை. அன்று குழுமியிருந்தோர் இதனை அறிவார்கள். நிருபர் சற்று நிதானமாக அவதானித்திருக்கலாம்.

''யாழ்ப்பாணத் தமிழர்களும், மட்டக்களப்புத் தமிழர்களும் மட்டும்தான் தமிழை வளர்க்கிறார்களா?'' இப்படி நான் கேட்டது உண்மையே; ஏனெனில். மலையகத்திலும்தமிழ்வளர்க்கப்படுகிறது என்பதைப் புட்டுக் காட்டவே இதனைக் கூறினேன். ஏன்? மலையகத்தில் மட்டுமல்ல, மேற்கிலும் (கொழும்பிலும்) தெற்கிலும் கூட தமிழ் வளர்க்கப்படுகிறது என்றேன். எனவே, வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்திய பகுதி ஆகிய இந்த ஐந்து பகுதிகளும் சேர்ந்தால் தான் (கையில் இருக்கும் ஐந்து விரல்களைப் போல) நல்ல பணியாற்ற நம் எழுத்தாளர்களின் கையால் முடியும் என்றேன். இதில் என்ன தவறிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை!

''யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் தான் தமிழறிஞர்கள் இருந்தார்களா?'' என்று கேட்கப்பட்டதாம். உண்மை. இது காலவரை மலையகத்தில் உள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்டு வந்தார்கள் என்பதை நாடறியும்—நல்லவர் மனமறியும். 'மேற்கூறிய இரண்டு பகுதிகளில் மட்டும் தான் தமிழர்கள் இருந்தார்களா' என்று கேட்பது எவ்வாறு தவறாகும். எந்தவிதத்தில் பிரிவினையாகும்! ஆம்; யாழ்ப்பாணப் பகுதித் தமிழ் மக்களும் — மட்டக்களப்புப் பகுதித் தமிழ் மக்களும் ''எங்களுக்குக் கொடுப்பதை—மலையகத் தமிழர்களுக்கும் கொடுங்கள்'' என்று புட்டுக் காட்டிக் குரல் எழுப்பினால் யாராவது 'பிரிவினை' என்று தூபம் போடுவார்களா!

ஏன்! நாட்டை பூகோள—தேசமான ரீதியில் பிரித்துக் கூறி—இந்தப் பகுதிகளில் வாழும் தமிழர் எல்லாரும் ஒன்றுபட வேண்டும் என்றால் எவ்வாறு பிரிவினையாகும், சிந்திப்போமாக: எனவே — ''ஏனைய பகுதித் தமிழர்களுக்குக் கொடுக்கப்படும் உரிமைகளிலும் பெருமைகளிலும் மலையகத்தவர்களுக்கும பங்கு தாருங்கள்'' என்று கேட்பது தவறு என்றால் நான் வேறு என்ன கூற முடியும்!

எனவே எல்லாவற்றையும் விட்டு விட்டு நாம் எந்தவொரு கட்சியின் கொள்கை

(11-ம் பக்கம் பார்க்க)

ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் இந்த நிலைக்குக் காரணம் யார்? இலங்கை சுதந்திரமடைந்தவுடன் இந்நாட்டில் உழைத்துவந்த அத்தனை தொழிலாளர்களுக்கும் (மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்களுக்கு) உடனடியாகப் பிரஜா உரிமை வழங்கி இந்நாட்டுப் பிரஜைகளாக்கியிருந்தால் இந்நிலை வருமா? அவர்களுக்கு உரிமை கொடாது. 'கள்ளத்தோணி' என்று கேவலமாக அழைத்ததோடு வதைக்கவும் செய்தார்கள். இந்நிலையில் மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் மனநிலை எப்படியிருக்கும் இந்தக் கொடுமைகளை அனுபவித்துக்கொண்டு ''நாங்கள் இந்நாட்டுப் பிரஜைகள்'' என்று அவர்கள் எங்கே போய் சொல்வது? இவ்வாறெல்லாம் அல்லற்படும் மலையகத் தொழிலாளர்களின் சந்தாவில் உயிர் வாழும் சங்கங்களின் பச்சோந்தி வேலைகளை அடுத்த தொடரில் எழுதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியை விரட்டியவருக்குச் சிங்களத்தை வரவேற்பவர் விழா எடுப்பதா?

## அண்ணா விழாவில்

### வானாப் போனாவுக்கு என்ன வேலை?

அறிஞர் அண்ணா நினைவு தினத்தை ஒட்டி வட மாகாணத்தில் நடைபெற்ற சில கூட்டங்களில் ஓர் அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. இந்தியைத் தமிழகத்தில் இருந்து ஓட ஓட விரட்டிய அறிஞர் அண்ணாவுக்கு எடுக்கப்பெற்ற சில விழாக்களில் சிங்களத்தை ஈழத்தமிழகத்தில் நிலபாவாடை விரித்து வரவேற்கக்கூடிய சில பொதுவுடமைத் தோழர்களும் கலந்துகொண்டதையே அப்படி அதிசயம் எனக் குறிப்பிட்டேன்.

'தமிழ் மக்கள் நெஞ்சங்களில் எல்லாம் அண்ணாவின் நினைவு நீக்கமற நிறைந்திருக்கிறது' என்பதை காலங்கடந்தாவது புரிந்துகொண்டு அதற்குத் தலைசாய்த்த திருவாளர்கள் வ. பொன்னம்பலம், எம். சி. சுப்பிரமணியம் போன்ற பொதுவுடைமைத் தோழர்களைப் பாராட்டுகிறோம். 'அண்ணாவின் உருவத்தை தமிழர்களது மனத்திரைகளிலிருந்து அழித்திட வேண்டும் — அண்ணாவின் கருத்துக்கள் ஈழத்தில் பரவிடக்கூடாது' என்பதில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் எமது ஆட்சியாளர்களுக்கு எதிராக இந்த ஒரே ஒரு சங்கதியிலாவது துணிச்சலுடன் செயல்பட்ட அவர்களை மிகமிகப் பாராட்டுகிறோம்.

அப்படித் துணிச்சலுடன் விழாவில் கலந்துகொண்டவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் திரு. வ. பொன்னம்பலம்! அவர் தென் கருணை வள்ளுவர் சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பெற்ற அறிஞர் அண்ணா நினைவு விழாவில் பின்வருமாறு பேசியதாக செய்தித்தாள்கள் வாயிலாக அறியக்கிடக்கிறது.

"அண்ணாவுக்கு விழா எடுப்பதானால் தமிழ்த் தலைவர்கள் அண்ணா காட்டிய முற்போக்குப் பாதையைப் பின்பற்றவேண்டும். அறிஞர் முற்போக்குக் கட்சிகளுடன் இணைந்து இந்திரா காந்தியுடன் ஒத்துழைத்தார். அதேபோல் இங்குள்ள தமிழரசியல் கட்சித் தலைவர்களும் பிரதமர் சிறிமா காட்டும் சோசலிசப் பாதையில் சேர்ந்து உழைக்க முன்வர வேண்டும்."

திரு. பொன்னம்பலம் அவர்கள் மேற்படி தனது கூற்றில் 'தமிழ்த் தலைவர்கள்' என்றும் தமிழரசியல் கட்சித் தலைவர்கள்' என்றும் குறிப்பிடுவது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்களைத்தான் எனத் தெரிகிறது. ஏனெனில் மற்றொரு தமிழ் அரசியல் கட்சியான தமிழ்க் காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் ஏற்கனவே பிரதமர் சிறிமாவின் பாதையில் சேர்ந்துதான் உழைத்துவருகிறார்கள் அத்துடன் அவர்கள் அண்ணாவுக்கு விழா எடுப்பவர்களுமல்லர். எனவே 'அண்ணாவைச் சரியாகப் புரிந்துகொண்டவர்கள் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள்தான் — அண்ணாவின் பாதையில் செல்பவர்களும் அவர்கள்தான்' என்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்ட திரு பொன்னம்பலத்துக்கு நன்றி!

திரு. பொன்னம்பலம் திருமதி இந்திரா காந்தியுடன் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை ஒப்பிடுவது கொஞ்சம்கூடப் பொருத்தமற்றது. இந்திரா காந்தியின் முற்போக்கு கொள்கைகளையும், சிறிமாவின் முற்போக்கு கொள்கைகள் எனச் சொல்லப்படுபவைகளுக்கும் பல வேறுபாடுகள் உண்டு. இப்படி இருக்கும்போது இருவரையும் ஒப்பிட்டு ஒற்றுமைகாண முயல்வது ஓர் ஏமாற்று வித்தையாகும்.

இந்திரா காந்தி கடைப்பிடித்து வருவது உண்மையான சோசலிசம்: சிறிமாவோ கடைப்பிடித்துவருவதோ சிங்கள சோசலிசம்!

இந்திராவின் முற்போக்குக் கொள்கைகளை உண்மையான சோசலிசப் பற்றுக்கொண்ட இந்தியத் துணைக்கண்டத்து எந்த ஒரு மாநிலமோ அல்லது இந்தியாவிலுள்ள எந்த ஓர் இனமோ ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் சிறிமாவின் முற்போக்குக் கொள்கைகள் எனச் சொல்லப்படுபவைகளை உண்மையான சோசலிசப் பற்றுக்கொண்ட தமிழர்களே எதிர்க்கவேண்டியிருக்கிறது? அவைகளில் தமிழினத்துக்குப்பேரிடர் விளைவிக்கக்கூடிய என்ன திட்டம் எந்த உருவில் மறைந்திருக்கிறதோ என எண்ண வேண்டியிருக்கிறது. இதனால்தான் முற்போக்கு எண்ணங்கொண்ட அண்ணா இந்திரா காந்தியோடு ஒத்துழைக்க முடிந்ததுபோல் முற்போக்கு எண்ணங்கொண்ட தமிழரசுக் கட்சித் தலைவர்களால் சிறிமாவுடன் ஒத்துழைக்க முடியாமல் போய்விடுகிறது:

'வடக்குக் கிழக்கு வாழ் தமிழர்கள் வந்தேறு குடிகள் அவர்களுக்கு எந்தச் சலுகைகளையும் சிங்கள மக்கள்

(போனுச்சாறு)

வழங்கத் தயாராக இல்லை' என்றார் சிறிமாவின் முற்போக்கு அரசாங்கத்தைச் சேர்ந்த ஓர் அமைச்சர். இவ்வாறு இந்திராவின் முற்போக்கு அரசைச் சேர்ந்த எந்த ஓர் அமைச்சரும் பேசியதில்லை. பேசியிருந்தால் அண்ணாவின் ஒத்துழைப்பு அவருக்குக் கிடைத்திராது என்பது மட்டுமன்றி பண்டித நேரு சந்தித்ததைவிட பத்துமடங்கான எதிர்ப்பையும் அவர் சந்தித்திருப்பார்:

தமிழ் மாணவர்கள் கல்வியில் முன்னேறுவதைப் பொறுக்கமாட்டாது சிறிமாவின் முற்போக்கு அரசு 'தரப்படுத்தல்' என்ற போர்வையில் தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைத்தது: இப்படி இந்திராவின் முற்போக்கு அரசு செய்ததில்லை. செய்திருந்தால் அண்ணாவின் ஒத்துழைப்பு அவருக்குக் கிடைத்திராது என்பது மட்டுமல்ல. இந்திராவுக்கு எதிராக அவர் போர்க்கொடியே உயர்த்தியிருப்பார்:

'தமிழ் மொழிக்கு அற்ப உரிமைகள் கூட வழங்கக்கூடாது' என ஆர்ப்பாட்டம் நடாத்தி பயங்கரமான இனவெறியைக் கக்கி கடைசியில் காவலர்களின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகிய தமிழ்ப் பகைவன் இரத்தின சாராதேரோவுக்கு நினைவு மண்டபம் நிறுவி மகிழ்ந்தனர் சிறிமாவும் அவரது முற்போக்கு அமைச்சர்களும். இவ்வாறெல்லாம் இந்திராவின் முற்போக்கு அரசு 'சின்னத்தனம்' புரியவில்லை புரிந்திருந்தால் அண்ணாவின் ஒத்துழைப்பு அவருக்குக் கிடைத்திருக்காது என்பது மட்டுமன்றி அவரது கோபத்துக்கும் இந்திரா ஆளாகியிருப்பார்:

முந்திய அரசாங்கம் தொடக்கி வைத்த காங்கேசன்துறை துறைமுகத் திட்டம் அச்சுவேலி தொழில் பேட்டைத் திட்டம் ஆகியவைகளையெல்லாம் சிறிமாவின் முற்போக்கு அரசு நிறுத்தி வைத்திருக்கிறது: இப்படி இந்திராவின் முற்போக்கு அரசு சேலம் உருக்காலைத் திட்டம், தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் ஆகியவற்றையெல்லாம் நடந்துகொள்ளவில்லை. நடந்துகொண்டால் அண்ணாவின் ஒத்துழைப்பு அவருக்குக் கிடைத்திராது என்பது மட்டுமன்றி, அதற்கெதிராக அவர் அணியே திரட்டியிருப்பார்:

இவ்வாறு அண்ணா இந்திராகாந்தியுடன் ஒத்துழைத்ததிற்கும், தமிழரசு கட்சியினர் சிறிமாவுடன் ஒத்துழைக்கக் கூடாது என்பதற்குமாக ஏராளமான காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்:

தமிழரசுக் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகம் போல் ஒரு முற்போக்கு இயக்கமே! தமிழரசுத் தலைவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் போல் முற்போக்கு எண்ணங்கொண்டவர்களே! ஆனால் இந்தியாபோன்ற ஓர் அரசியலமைப்பும் இந்திராபோன்ற ஒரு பிரதமரும்தான் இங்கு இல்லையே!

இந்தியாவில் உள்ளது போல் ஓர் இணைப்பாட்சியை இங்கு ஏற்படுத்தி, இந்திரா காந்திபோல் சிறிமாவும் உண்மையான சோசலிசத்தைக் கடைப்பிடித்தால் அண்ணா அங்கு ஒத்துழைத்தது போல் தமிழரசாரும் இங்கு சிறிமாவுடன் ஒத்துழைக்கத் தயங்கமாட்டார்கள்:

இதுவே அண்ணா விழாவில் பேசிய வானாப்போனாவுக்கு நாம் பதிலாகக் கூறக் கூடியது.

---

## தமிழ்ப் பாடசாலை சிங்களமயமாகின்றது

கொழும்பு இந்துக் கல்லூரி தமிழர்களின் முயற்சியால், தமிழர்களின் பணத்தினால் உருவாக்கப்பட்ட பாடசாலையாகும். பாடசாலை தொடங்கிய காலந்தொட்டு 1963ம் ஆண்டுவரை தமிழ் மாணவர்களின் தனிப்பெரும் பாடசாலையாக மிகச் சிறப்புடன் இயங்கிவந்தது குறிப்பிடத்தக்கது.

1963ம் ஆண்டு வந்த அதிபர் சிங்கள வெறியர்களின் கைக்கூலியாக எட்டப்பர் கூட்டத்துள் ஒருவராக இருந்தார் என்பது அவரின் ஒவ்வொரு செய்கையின் மூலமும் அறியக் கூடியதாக இருந்தது. அவர் பதவியேற்றபின் சிங்களவர்களுக்கென தனிப் பிரிவு — தமிழர்களின் சொந்த முயற்சியினால் உருவாக்கப்பட்ட பாடசாலையில்—உருவாக்கப்பட்டது.

அதிபர் அதற்கு ஆதரவளித்ததால் மற்றவர்களின் எதிர்ப்பு முயற்சிகள் வீண் போயின.

1964ம் ஆண்டுக்குப்பின் பாடசாலையில் வழமையாக நடைபெற்று வந்த விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு விழா என்பன நிறுத்தப்பட்டன. ஆண்கள் பாடசாலை கலவன் பாடசாலையாயிற்று.

1968ம் ஆண்டு பாடசாலையில் இயங்கிவந்த ஆறும் வகுப்பு பிரிவுகள் முற்றாக நீக்கப்பட்டன. அதற்கு ஏற்றவாறு சிங்கள மாணவர்கள் தொகை அதிகரிக்கப்பட்டது.

1969ம் ஆண்டு பாடசாலையில் இயங்கிவந்த ஏழாம் வகுப்பு பிரிவுகளும் முற்றாக நீக்கப்பட்டு சிங்கள மாணவர்கள் தொகை அதிகரிக்கப்பட்டது. 1969ம் ஆண்டு பாடசாலை வரவுசெலவுக் கணக்குகளில் ஏற்பட்ட தவறுகாரணமாக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட அதிபர் 1970 ஆண்டு இறுதியில் மீண்டும் பதவிக்கு வந்தார்.

இவர் இடதுசாரிக்கட்சியொன்றின் ஆதரவாளர் என்றும் அதனால்தான் இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கம் காலத்தில் பதவியேற்றதன்பின் இவருக்குதவி மீண்டும் பதவி கிடைத்தது என்றும் பலர் பேசிக்கொண்டார்கள்.

1971ம் ஆண்டு தொடக்கத்தில் இவர் புதிதாக சிங்கள க. பொ. த. உயர்தர பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஆயுத்தங்கள் செய்து தமிழ் பிரிவு 8ம் வகுப்புகளை நீக்குவதற்கும் திட்டம் வகுத்துவிட்டு பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார்.

இதிலிருந்து இவரின் திட்டங்கள் தெரிகின்றதல்லவா. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தமிழ் பிரிவை நீக்கி சிங்கள மாணவர்கள் தொகையை அதிகரித்து இறுதியில் பாடசாலையைச் சிங்களப் பாடசாலையாக்குவதுதான் அவரின் திட்டம்.

இத்திட்டத்தை 1968ம், 1969ம் ஆண்டுகளில் முறையே 6ம், 7ம், வகுப்புப் பிரிவுகளை நீக்கியதன்மூலம் செயலாக்கினர். 1970ம் ஆண்டு இவர் பதவியில் இல்லாததனால் இத்திட்டத்தைச் செயலாக்க முடியவில்லை. மீண்டும் 1971ம் ஆண்டு தமிழ் பிரிவு 6-ம் வகுப்புக்களை நிறுத்த முயற்சித்து சிங்கள பிரிவு க. பொ. த. உயர்தர வகுப்புக்களைத் தொடங்கியதன் மூலம் தன் திட்டத்தைச் செயலாக்கி பதவியில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். இவர் இன்னும் இரு வருடங்கள் பதவியில் இருப்பாரானால் தமிழ் இந்துக் கல்லூரி சிங்கள பௌத்த பாடசாலையாக முற்றாக மாறியிருக்கும்:

இவர் ஓர் இடதுசாரி ஆதரவாளர் என்பதிலிருந்து எட்டப்பர் கூட்டத்தினரான அமைச்சர் குமாரசூரியர் வ. பொன்னம்பலம், தியாகராஜா, அருளம்பலம், ஆனந்தசங்கரி, ராஜன் செல்வநாயகம், துரையப்பா போன்ற தமிழ் துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவராவார்.

---

## பொங்கி எழு!

—கொற்றை பி. கிருஷ்ணனந்தன்—

மும்மன்னர் போற்றிய முச்சங்கம் வாழ்த்திய
முத்தமிழ் எங்கள் தமிழ்—ஒரு
இம்பிய ளவேனும் தன்புகழ் குன்றாது
இருந்ததும் எங்கள் தமிழ்!—இன்று
அம்மம்மா இந்தத் தமிழின் நிலைமையை
எண்ணிக் குமுறுகின்றேன்!—இனிச்
சும்மா இருக்க முடியுமா? போரைத்
தொடங்குவம்; பொங்கியெழு!

தாய்த்தமிழைத்தூற்றி வேற்று மொழிகளைத்
தாரக மந்திரமாய்,—மிக
வாழ்த்தி வணங்கிப் பதவிகள் பெற்றுமே
வாழ்கிறார்; பொங்கியெழு!—இங்கு
தாழ்த்தப்பட் டமக்கள் என்று தமிழரைத்
தமிழரே தாழ்த்துகிறார்!—இவரை
வீழ்த்தித் தமிழரெல் லோருமோர் இனமென
நாட்டுவம்; பொங்கியெழு!

உரிமை கிடைத்திட வில்லையெனில் இன்னும்
உறக்கமா? பொங்கியெழு!—அட
எருமைபோ லின்னும் இருப்பதா? இன்றே
எதிர்த்திடப் பொங்கியெழு...உளச்
சிறுமை படைத்தவர் செல்வத் தமிழினைச்
"சீ" எனப் புறக்கணித்தார்—இனிப்
பொறுமைவிட் டேயெங்கள் தமிழின் பெருமையை
புகட்டுவம்! பொங்கியெழு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி செப்பும் செம்பொருள்யாது?

உலகிலே எண்ணிக்கையில் ஏற்றம் பெற்ற விழாக்களைக் கொண்டாடும் ஒரு மதத்தவர் உண்டென்ருல் அவர்கள் இந்து மதத்தவர்தான் என்பதை அறுதியிட்டு உறுதியோடு கூறமுடியும். இவ்விதம் கொண்டாடப்படும் விழாக்கள் அனைத்தும் பொருள் பொதிந்தவையா என்ற கேள்வி எழுகின்றபோது ஆம்! என்று அனைத்தையும் யாம் கூறும் நிலையில் இல்லை. ஆனல் குறிப்பிடத்தக்க சில விழாக்களுள் சிவராத்திரி விழாவும், அன்று நோற்கப்படும் நோன்பும் ஆழ்ந்த பொருளின் உள்ளடக்கமாய் விளங்குகிறதென்பதை அறிஞர் அனைவரும் ஒருங்கே ஏற்பது உறுதி.

பல சிறப்பியல்புகளின் இருப்பிடமாய் விளங்கும் சிவராத்திரி விழா எப்போது எங்கே எப்படித் தோன்றியது என்பதையிட்டு எவரும் எல்லோரும் ஏற்கும் முறையில் கருத்துத் தெரிவிக்கமுடியாமல் பழமையில் மூழ்கிக் கிடக்கிறது.

ஆண்டவனின் அளவிலா அருட் தன்மையை எவ்விதம் அருஞ் சொற்களாலும் விளக்குதல் அரிதோ அதுபோன்றே சிவராத்திரியின் சிறப்பு பற்றி செஞ் சொற்களாலும் செப்பி நிற்றல் கடினமாகயிருக்கிறது. எனினும் சிவராத்திரியின் சிறப்புப் பேச ஒன்று, இரண்டு, மூன்று

**'ஈழவேந்தன்'**

எனப் பெருகி பல நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் கந்தபுராணம், சிவ புராணம் லிங்க புராணம், பிரமோத்தர காண்டம், உபதேச காண்டம் யாழ்ப்பாண வரதராச பண்டிதர் யாத்த சிவராத்திரி புராணம் ஆகியவை குறிப்பிடத்தக்க சிலவாகும்.

இவற்றுள் கந்தபுராணம் தந்த கச்சியப்பர் என்றே ஒரு நாள் திருவண்ணுமலையில் எழுந்தருளியுள்ள உண்ணுமுலையாள் உமையாளின் மணவாளன் அண்ணுமலையான் அடியார் முன் நிலையில் பேரொளிப் பிழம் பாகத் தோன்றி தன் முடியையும் அடியையும் எவரும் காண முடியாத நிலையை உணர்த்தி நின்ற திருநாளே சிவராத்திரியின் தோற்றமென எடுத்தோதும் கருத்தை வெறும் புராணக் கதையென ஒதுக்காது ஆழ்ந்த மெய் விளக்கத்தின் உள்ளடக்கமென உய்த்துணர்தலே ஏற்புடையதாகும்.

மாசித் திங்களில் தேய்பிறையின் 1ம் நாளில் கொண்டாடப்படும் சிவராத்திரி விழா சிலணுகிய செம்பொருளை — முழுமுதற் பொருளை இறைஞ்சி நிற்பதற்குரிய இரவு என்ற பொருளை உணர்த்தி நிற்கிறது.

எம்மையெல்லாம் படைத்துக் காத்து இன்னருள் வழங்கும் இறைவன் பால் நினைந்தூட்டும் தாயினும் நல்ல தலைவனுக உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய ஒப்பற்ற பேரொளியாக மிளிர்கிருன். இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காது வீற்றிருக்கும் இறைவனை யாம் எப்போதும் தப்பாது வழுத்தி வாழ்த்த வேண்டியது எம் கடமையாகும். இப்பேருண்மையை உணர்ந்த நிலையிலும் எம்முள் எத்தனைபேர் இறைவனை இடையருது வழிபடுகிருேம். அவ்விதம் தவறு செய்த நாம் ஆண்டில் ஒரு முறையாவது—ஒரு இரவு ஆகுதல் எமது தூக்கத்தை சிறிது அர்ப்பணித்து ஆண்டவனை நினைந்து வழிபடுவதற்கு ஒரு வாய்ப்பாகவே சிவராத்திரி மலர்ந்துள்ளதென்று யாம் கருதுகிருேம். எம் வாழ்வில் ஏதாவது ஒரு உன்னத குறிக்கோளை-இலட்சியத்தை அடைய விரும்பின் எம்மை யாம் ஓரளவிற்காகுதல் அர்ப்பணிக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும். உலகில் வாழ்வும் வளர்ச்சியும் கூட எம்மை யாம் பிறர்க்கு அர்ப்பணிப்பதிலேயே தங்கியிருக்கிறது. வேறு சொற்களில் விளம்பின் 'நான்' என்ற நிலைமாறி 'நாம்' என்ற நிலை உருவாகும் போதுதான் உலகம் உயர் நிலை அடைகிறது.

சிவராத்திரி நாள் அன்று யாம் உணவு உண்ணுது நோன்பு நோற்பதோடு தூங்காது விழித்திருக்கிருேம். இவ்விதம் எம்மை யாம் ஓரளவு அர்ப்பணிக்கின்றபோது எம் உள்ளம் தூய்மை பெறுகின்ற போது அது தூய இறைவனின் இருப்பிடமாக துலங்குகின்றது. எம் மாய இருளை அகற்றி எம் ஆணவ மலத்தை நீக்கி எம் முன்னை வினைகளின் முடிச்சை அறுத்து இறைவன் எம் இதயத்தில் இடம் பெறுகின்றபோது யாம் பெறுகின்ற பேரின்ப நிலையை எளிதில் சொற்களில் வடித்துத்தர முடியாது. அது உண்மையில் உய்த்து உணர வேண்டிய நிலை. இப்பெரும் பேரின்ப நிலையை சிவராத்திரி எமக்குத் தருகின்றது.

''மாசி மகத்திற்
சிவநிசியின்
மழு மான் ஏந்தி
மலர்ப் பாதம்
பூசை புரிவோர்
தாம்வேட்ட
போகம் முழுதும்
கைக்கொள்வர்''

எனச் சமயச் சான்ருேர் ஒருவர் சிவராத்திரியின் பெருமை பற்றி சாற்றிய கூற்று வெறும் வெற்றுரையோ புகழுரையோ அல்ல அது உண்மையின் பொருள் பொதிந்த பொன்னுரையாகும்.

சிவராத்திரியை தவராத்திரியாக தமிழர் சிந்தையில் ஏற்பின் அவர்கள் தாரணியில் தலையெடுப்பது உறுதி.

---

## ஐக்கிய முன்னணி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்து—விருந்து வைத்து காதோடு காது கொடுத்து கருத்துப் பரிமாறுகிருர் இந்திரா அம்மையார் அங்கே—கருணுநிதி ஈழத்துக்கு வரக்கூடாது என்று கதவை அடைத்து தடைபோடுகிருர் சிறிமாவோ அம்மையார் இங்கே! எந்த விதத்தில் தோழரே இருவரும் ஒன்று?

மொத்தத்தில் நீங்கள் கொஞ்சப்பேர் ஈழத்தமிழினத்தைப் பேய்க்காட்டுகிறீர்கள். உங்களின் இந்தத் திருகுதாளங்கள் நீண்ட காலம் நிலைக்காது என்று ஈழத்தமிழ் இளைஞர் சார்பாக உங்களை எச்சரிக்கிறேன்.

நண்பர்களே! இளைஞர்களே! என் அருமை மாணவச் செல்வங்களே! என்னுடைய சிற்றுரையை முடிக்கும் இந்த வேளையில் உங்கள் உணர்ச்சி மேலும் மேலும் வளர்க! உங்கள் உரிமைப் போர்க்குரல் மேலும் மேலும் ஓங்கி முழங்குக! என்று உங்களை மனமார நான் வாழ்த்துகிறேன்.

மொழிகள் அனைத்துக்கும் முதல் மொழியாம்— மூத்த மொழியாம் — முத்தமிழ் மொழியை பல்லாயிரம் ஆண்டுகளாய்ப் பல்லாயிரம் புலவர் வளர்த்த நல்லாரமுதாம் நம் அருந்தமிழை, 'தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்' என்று பாரதிதாசன் பாடிக்களித்த தங்கத் தமிழை— நம் தாய்த் தமிழை — இந்நாட்டில் அழியாது வாழவைக்கும் அரிய பணியில் நாம் நம்மைப் பலியிடுவோமாக.

—வணக்கம்.

---

## கொழும்பில்...

8-ம் பக்கத் தொடர்ச்சி)

அருட் திரு மைக்கல் சவிரிமுத்து அவர்கள் ''தாயை அவமதியாதீர், தாய் மொழியை மறவாதீர், தமிழ் வாழ உழையுங்கள்'' என்று கூறியவைதான் கூட்டம் 'பார்க்க' வந்த தமிழ் மக்களின் நெஞ்சத்தைத் தொட்டவை. மற்றுள்ள நிகழ்ச்சிகள் யாவும் விபரம் புரியாத சிறுவர்களாலும்—படை எடுத்து வந்திருந்த புற்றீசல்களாலும் 'சங்காரம்' செய்யப்பட்டது.

பெரும் புலவர் வீரமாமுனிவர் போன்ருேர் வளர்த்த தமிழை—தமிழ் மக்களை மாசு படுத்துவது 'முன்னணியின் நோக்கமானல் காலமுணராத நாசகாரர்களுக்குப் புரட்சிக் கவிஞரின் பாடலொன்றை நினைவூட்டுகின்ருேம்.

தமிழனுக்குத் தொண்டு
செய்யும் தமிழனுக்குத்
தடை செய்யும் நெடுங்
குன்றும் தூளாய்ப்
போகும்

தமிழுக்குத் தொண்டு
செய்வோன் சாவதில்லை
தமிழ்த் தொண்டன்
பாரதிதான்
செத்ததுண்டோ?

---

## எங்கள் பகைவர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காரமாக உரிமைகளைப் பறித்துக் கொள்வதும் அனுபவத்தால் அறிந்து கொள்ள முடிந்தது.

உடலைப்பற்றிக்கொண்டே வெளியில் தெரியாது அழித்துக்கொல்லும் புற்றுநோயான ஒற்றுமையின்மை நம்மைச் சுற்றிக்கொண்டிருப்பதுதான் தமிழனின் தாழ்வு நிலைக்குக் காரணம் என்பதைத் தலைவர்கள் தெரிந்துகொண்டார்கள்.

சங்க இலக்கியத்தில் காணுகின்ற காட்சியான வெப்பம் மிதமிஞ்சிய — செடிகொடி மரங்களற்ற சூனியமான பாலைவனப் பிரதேசத்தில் கள்ளிமரம் மட்டும் இருக்கும். வாழ்க்கையில் ஒன்றுபட முடியாத, எதிரும் புதிருமான தீராத பகைமை கொண்ட பிராணிகள் வெப்பத்தின் கொடுமை தாங்காத நிலையில் கள்ளிமர நிழலில் தங்கள் வேறுபாட்டை பகைமையை மறந்து நண்பர்களாகச் சேரும்.

அதே நிலையில் தான் ஈழத்து அரசியல் பாலைவனத்தில் [illegible] யான் கொடுமையில் நின்று

---

## மலையக...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு நடப்பவராய் இருந்தாலும் ''தமிழர்'' என்ற ஓரினத்தின் அடிப்படையில் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்றே வேண்டுகோள் விடுத்தேன். (வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும்) என மலையக எழுத்தாளர்கள் மலையகத்தைப் பற்றி மட்டும் எழுதாமல் 'நாட்டின்வளம்' பெருக்க தேசிய ரீதியில் எழுத வேண்டும் என்றே கேட்டுக் கொண்டேன். எப்பகுதியில் வாழ்ந்தாலும் அவ்வப் பகுதியில் உரிமைகளைப் பெற்று—பொதுப் பிரச்சினைகளில் ஒன்றுபட [illegible] என்ற அடித்தள [illegible] பேசினேன்!

---

## சாம்பல் தீவு ஆதவன் இசைக் கழகம்

சாம்பல் தீவு ஆதவன் இசைக் கழகத்தால் கொண்டாடப்பட்ட முதலாவது ஆண்டு விழாவை கி. ச. தலைவர் திரு. வேலாயுதம் அவர்கள் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். டாக்டர் திரு. வை. தங்கக் கணபதி அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை வகித்தார். திருமலை நாடாளுமன்ற பிரதிநிதி திரு. பா. நேமிநாதன், திரு. நா. தம்பிராசா, திரு. ச. நல்லலிங்கம் ஆகியோர் கழகத்தின் சேவையைப் பாராட்டி சொற்பொழிவு ஆற்றினர்கள். செயலாளர் திரு. செ. முத்துச்சாமி ஆண்டு அறிக்கையை வாசித்தார். தனதிகாரி திரு. இ. செல்வராசா வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். கோணேஸ்வரா இசைக் கழகம், கலைவாணி இசைக் கழகம், இளைஞர் இசைக் கழகம், ஆதவன் இசைக் கழகம் ஆகிய கழகங்கள் இன்னிசை விருந்தளித்தனர். சாம்பல் தீவு சித்தி விநாயகர் நாடக மன்றம் உவந்தளித்த ''தியாகம்'' என்னும் நாடகம், நிலாவெளி றேமன் கததோலிக்க பாடசாலை மாணவர்களால் வாய்மை காத்த வேந்தன் என்னும் புராண நாடகம் நடித்துக் காண்பித்தார்கள். சாம்பல் தீவு லீயோ நாடகக் குழுவினரால் ஒன்றே குலம் என்னும் நாடகம் நடைபெற்றது. திருமதி லீயோ அவர்களால் பயிற்சியளிக்கப்பட்ட மாணவிகளால் பரத நாட்டியம் நடைபெற்றது. இவ்விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கு பற்றினர்கள்.

---

## அனுதாபம்

தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கால அங்கத்தவர்களும் சத்தியாக்கிரக இயக்கங்களில் முக்கிய பங்கு கொண்டு உழைத்தவர்களும், கடந்த தேர்தலின் போது கட்சியின் வெற்றிக்காக அயராது பாடுபட்டவர்களுமாகிய வவுனியா நொச்சிமோட்டைச்சேர்ந்த திரு. வே. கயிலாய பிள்ளை, செட்டிகுளத்தைச் சேர்ந்த திரு. பொன்னையா ஆகியோரின் மறைவையிட்டு வவுனியா த. அ. கட்சி மாவட்டக்கிளையின் கூட்டத்தில் இவர்களது ஆன்மா சாந்தியடைய இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

அத்துடன் இவர்களின் குடும்பங்களுக்கு எமது கிளையின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

---

—தமிழர்களைப் பாதுகாத்து அரசியல் விடுதலை காணத் தங்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்று சேர்ந்திருக்கும் ஆனந்தக் காட்சி நடந்திருக்கின்றது; தமிழ் பேசும் இனத்தவர் ஆவலோடு எதிர் பார்த்த ஒற்றுமைக்கீதம் பிறந்திருக்கின்றது.

இந்த ஒற்றுமை, தமிழர்களின் ஒளிமயமான எதிர்கால வாழ்வுக்கு வித்தாகவும்—சத்தாகவும் அமைந்திருக்கின்றது.

இனி உரிமை மறுக்கப்பட்டால் — கோரிக்கை புறக்கணிக்கப்பட்டால்— மனித உரிமை தட்டிக் கழிக்கப்பட்டால் புரட்சி வெடித்து உள்ளக்குமுறல் எரிமலையாகி விபரீதம் விளையுமென்பதை ஆட்சியாளர் தெரிந்து கொள்ளவேண்டும்.

---

## ஒரு சோசலிசக் கதை!

ஒரு தாய்க்கு குழந்தைகள் இருவர். மூத்தவன் வம்பன், நெறி தவறி வாழ்பவன். இளையவன் நல்லவன், நேர்மையானவன், குணத்திலே அவன் குன்று—ஆனல் உடல் மெலிந்தவன் ஊருக் குழைத்து ஓடாகி விட்டான்.

மூத்தவனுக்கு தாய் மேல் பற்றில்லை ஆனல் அவள்போட்டிருந்த சங்கிலியை, காப்பை, காதணியை அபகரித்துக் கொண்டு ஓடி விட வேண்டுமென்பது அவன் அவா.

தாயோ இறப்பதற்கு நியாயமில்லை கட்டான உடலழகு, அவனைக் கொன்றுநகை நட்டைப் பறித்து விட திட்டம் போட்டான் — மூத்தவன்—வம்பன்.

அருகிலுள்ள பரியாரி வீட்டைபோய் இரும்புச் சூரணம்- இரைப்பையை அரித்துவிடும் கொடிய நஞ்சு வாங்கிவந்து தாயிடம் கொடுத்து விட்டான். இதை 20 நாள் தின்ருயானல் இன்னமும் பல்லாண்டு வாழ்வாய் என்று பணிவாய் சொன்னன். இளையவனே இதை நீ தின்னுதே இடர்வரும் என்று எச்சரித்தான்.

தாய் வஞ்சகமே அறியாத பாவம், மருந்தை வாங்கி மனதார தின்ருள்; இருபதாம் நாளிலே அவள் உயிர் பிரியும் இது தான்பஸ்பத்தின் தன்மை.

பத்து நாள் கழிந்ததும், மூத்தவனுக்கு தாயின் நிலை தெரிந்து விட்டது. இன்னமும் பத்தே நாள்தான் வாழ்வாளென்று; எனவே அவளுக்கு பணிகாரம், பலகாரம், உடுபுடவை ஒடியல்கூள், உவப்பான தின்பண்டம் பலவும் தந்தான்.

20 ஆம் நாளிரவு நள்ளிரவில் இரும்புச்சூரணம் அவளைக் கொன்றுவிட்டது. காத்திருந்த அவன் நகை நட்டை எடுத்துக் கொண்டு இரவோடு இரவாக ஓடி விட்டான்; தம்பியோ தாயின்மேல் புரண்டு கதறி அழுதான் பாவம்.

இதிலே உண்மை ஒளிந்திருக்கிறது. மூத்தவன் தந்த நஞ்சு — இரும்பு பஸ்பம் தான் சோசலிசம், இதை தமிழ் தாய் உண்டால், 20 நாளிலே மடிவாள் என்பதனை,— இதனைகலக்கிக்கொடுத்த டாக்டர்கள்—நன்கு அறிவர்.

தமிழ்த்தாய் இறப்பாள் என்பதால்த்தான் சாகப்போகும் தமிழ்த்தாய்க்கு பல்கலைக்கழகமாம்,—பள்ளிக் கூடமாம், பாலமாம், பட்டமாம், மின்சாரப் பெருவிளக்காம். இப்படியாக எத்தனையோ. ஆதலினல் சோசலிசச் சூரணத்தை அன்னை தின்ருல் அதன் பின் அவள் உயிர் பிரிந்தால்— யாருக்கு பல்கலைக் கழகம், யாருக்கு பாலம், யாருக்கு பட்டம்?,

—கந்தரோடையில்
வழக்கறிஞர்
மு. திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது


பாரதி
ஜெயந்தி
லக்ஷ்மி
விஜயலலிதா

2வது வெற்றிகரமான வாரம்

செல்லமகால்

இம்பீரியல் (மட்டு நகர்) நெல்சன் (திருமலை)

நில்! ஸ்டொப்! கவனி! ஒவ்சேர்வ்! காதலி! லவ்!




ஜெய்சங்கர்
நாகேஷ்
நம்பியார்
சுந்தரராஜன்

---

தமிழ் திரையுலக வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் சித்திரம்
இப்பொழுது 6வது வாரமாக அமோக வெற்றியுடன் காட்சியளிக்கிறது

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்)

*நடிகர்திலகம் சிவாஜிகணேசன்



* காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ்
எஸ். வி. ரங்கராவ்
நடித்த

கதை-வசனம்-டைரக்ஷன்
ஸ்ரீதர்

ஸ்ரீதரின்
சிவந்த மண்
ஈஸ்ட்மென் கலர்

---

4வது வெற்றி வாரம்
ஜெய்சங்கர்
வாணிஸ்ரீ
—நடித்த—
கிங்ஸ்லி சப்பயர்
கன்னிப் பெண்

---

4வது வாரம் ஜனத்திரள் நிறைந்த வண்ணம் வெற்றிநடைபோடுகிறாள்

சென்ட்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்நகர்)

நடிப்புலகமேதை
சிவாஜிகணேசன்

கலைச்செல்வி
ஜெயலலிதா

பாலாஜி நாகேஷ் சுந்தரராஜன் முத்துராமன் தேவிகா குமாரிசச்சு

நடித்த

சுஜாத்தாவின்

எங்கிருந்தோ வந்தாள்

(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலேசன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் [illegible] ஸ்டோர் நயசந்கா வீதி, 194 ல், இலக்கத்தில்
1971ம் வருடம் பெப்ரவரி மாதம் 24-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது. —ஆசிரியர்: கோவைமகேசன்